# ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு

## பகுதி 1

**(The Revelation of The Seven Trumpets – Part 1)**

பிப்ரவரி 7, 2016, கல்வாரி சபை, சென்னை

**(February 7, 2016, Calvary Tabernacle, Chennai)**


போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

எங்களை நேசிக்கிற பரலோகப்பிதாவே உம்மைத் துதிக்கிறோம். இந்த அருமையான காலை வேளையிலே உமக்கு ஆராதனை செய்யத்தக்கதாக எங்களுக்கு நீர் கொடுத்த வாஞ்சைக்காக உமக்கு ஸ்தோத்திரம். தூரத்திலிருந்தும் சமீபத்திலிருந்தும் உம்முடைய ஆலயத்திலே கூடிவந்திருக்கிற உம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பீராக. உம்முடைய வார்த்தையை நாங்கள் தியானிக்க வந்திருக்கிறோம்.

புறாவானது கழுகை வழிநடத்துகிறது. நீர் ஞானஸ்நானம் பெற்றபோது ஆவியானவர் புறாவைப்போல் உம்மீது இறங்கினார். உம்மை வழிநடத்தினார். அதேபோல நாங்கள் இந்த கடைசிகாலத்திலே கழுகுகளாய் இருக்கிறோம். வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியப்படுகிறோம். ஆவியானவர் எங்களை நடத்துவீராக. பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சொல்லியிருக்கிறீர். விரும்புகிறவனாலும் அல்ல ஓடுகிறவனாலும் அல்ல இரங்குகிற தேவனாலே எல்லாம் ஆகும் என்று சொல்லியிருக்கிறது. பரிசுத்தஆவியினாலே எங்களை நடத்துவீராக. சகல சத்தியத்துக்குள்ளும் எங்களை வழிநடத்த வேண்டுமென்று ஜெபிக்கிறோம். பரிசுத்தஆவியானவர் வார்த்தையை உயிர்ப்பிப்பீராக. எங்கள் ஆத்துமாவை நீர் உயிர்ப்பிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறோம்.

நாங்கள் வாஞ்சையோடும் எதிர்ப்பார்ப்போடும் வந்திருக்கிறோம். எங்களுடைய விசுவாசத்தை நீர் ஊக்குவிப்பீராக. நாங்கள் எதிர்ப்பார்த்திருக்கும் நன்மைகளை உம்முடைய வார்த்தையின் மூலம் தருவீராக. உம்முடைய வார்த்தையைப் போதிக்கும்போது நீர் எங்களுடனே பேசுவீராக. முழங்கால்படியிட்டிருக்கிற அனைவரையும் நீர் ஆசீர்வதியும்.

கடந்த நாட்களில் நீர் எங்களுக்குப் பாராட்டின எல்லா நன்மைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம். அநேகர் இந்த நாளைக் காணமுடியவில்லை. நாங்கள் நிர்மூலமாகாதிருப்பது உம்முடைய கிருபையாயிருக்கிறது. உம்முடைய இரக்கமாயிருக்கிறது. உம்முடைய தயவாயிருக்கிறது. அநேகர் விசுவாசத்திலே நிலைத்திருக்க முடியவில்லை. ஆனால் எங்களை இம்மட்டும் நிலைத்திருக்கச் செய்திருக்கிறீர். எங்களுக்குப் பாராட்டின கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம். கிருபை மேல் கிருபைப் பெற்று பலத்தின்மேல் பலமடைந்து மகிமைமேல் மகிமையடைந்து மறுரூபமாகும்படி எங்களை நீர் ஆயத்தப்படுத்துவீராக.

எங்கள் மத்தியிலே நீர் உலாவுவீராக. அந்த குருத்தோலை ஞாயிறன்று நீர் தேவாலயத்தில் உலாவினீர். அதேபோல இந்த கல்வாரி கூடாரத்தில் நீர் உலாவுவீராக. ஜலத்தின்மேல் அசைவாடின தேவன் எங்கள்மேல் நீர் அசைவாடுவீராக. சிங்காசனத்தில் வீற்றிருந்த தேவன் எங்கள் இருதயத்திலே வாசமாயிருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறோம்.

உம்முடைய வார்த்தையை எங்களுக்கு உண்மையானதாய் **(real)** மாற்றுவீராக. அது ஜீவனுள்ளதாய் மாறட்டும். அது எங்கள் வாழ்க்கையிலே நிறைவேறுவதாக. நாங்கள் வாழுகின்ற காலம் இன்னதென்றும், இந்த நேரத்திற்குரிய செய்தி இன்னதென்றும், எவ்விதமாக எங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் நீர் எங்களுக்குப் போதிக்கும்போது நாங்கள் அதற்கு செவிகொடுக்கத்தக்கதாக, எங்கள் ஆவி ஆத்துமா சரீரத்தை ஒப்புக்கொடுக்கும்படியாக கிருபை தருவீராக. இந்த காலை வேளையிலே எங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம். உம்முடைய பரிசுத்தஆவி என்னும் அக்கினியாலே நீர் எங்களை அங்கீகரிப்பீராக. எங்களுடைய குறைகள் குற்றங்கள் எல்லாவற்றையும் இரத்தத்தின் அடியில் ஒப்புக்கொடுக்கிறோம். எங்களைப் பரிசுத்தப்படுத்தும்.

கர்த்தாவே இம்மண்டலம் முழுவதையும் உம்முடைய ஆவியினாலே நிரப்புவீராக. எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைப் பயபக்தியாகக் கேட்க, வார்த்தையை மரியாதையோடுகூட ஏற்றுக்கொள்ள, வார்த்தைக்கு நடுங்க, இயேசுவே நீர் கிருபைதருவீராக. சகல தடைகளையும் அப்புறப்படுத்தும். ஆராதனை முடியுமட்டும் உம்முடைய பிரசன்னம் இருக்கட்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## லேவியராகமம் 23: 23 – 34

23. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

24. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக.

25. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல் என்றார்.

26. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

27. அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள்

உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்.

28. அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

29. அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்.

30. அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அவன் ஜனத்தின நடுவிலே வைக்காமல் அழிப்பேன்.

31. அதில் நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.

32. அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வுநாள்; அதில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தவேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.

33. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

34. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக.

## ஆதியாகமம் 45: 1 – 5

1. அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல்: யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.

2. அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

3. யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு; என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவனுக்கு முன்பாகக் கலக்கமுற்றிருந்ததினாலே, அவனுக்கு உத்தரம் சொல்லக்கூடாமல் இருந்தார்கள்.

4. அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்.

5. என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்.

லேவியராகமம் 23: 23 – 25 வசனங்களில் நாம் எக்காளப் பண்டிகையைக் **(Feast of Trumpet)** குறித்து வாசிக்கிறோம். ஏழாம் மாதம் முதலாம் தேதி

எக்காளப் பண்டிகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கொடுக்கப்போகிற செய்தியின் தலைப்பு “ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு” **(The Revelation of The Seven Trumpets)**. மிக முக்கியமான செய்தி. கவனமாகக் கேட்கவேண்டும். நமக்கு வேதம் **(Bible)** நன்றாகத் தெரிய வேண்டும். இந்த கடைசி காலத்திலே வேதத்தின்மேல் நமக்கு தீராத வாஞ்சை வேண்டும் **(Passion to hear the Word of God)**. அப்போதுதான் நீங்கள் மணவாட்டியாய் மாறமுடியும். வேதத்தை நன்றாகப் படிக்க வேண்டும். பிரசங்கத்தைக் கேட்கும்போது வேத புத்தகத்தை நன்றாகத் திறந்து பார்க்கவேண்டும். நாம் வாழுகிற காலத்தையும், நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும், இயேசு என்ன செய்யப் போகிறார் என்றும் அங்கேதான் பார்க்க வேண்டும். இந்த வேதத்தில் தான் எல்லா ஆசீர்வாதங்களும் அடங்கி இருக்கிறது. ஆசீர்வாதம் வெளியில் இருந்து வரவேண்டும் என்று நினைக்காதீர்கள். அது இதில்தான் இருக்கிறது. இந்த வார்த்தையை ஆண்டவர் உங்களுக்கு உயிர்ப்பித்தால், இதை உங்களுக்கு உண்மையானதாக **(real)** மாற்றினால் ஆசீர்வாதம் வந்துவிடும். போதகர் பிரசங்கிக்கும்போது இதைச் சரியாகப் பார்த்தீர்களானால் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். ஆசீர்வாதத்திற்கு ஒரே வழி அதுதான்.

இப்பொழுது சொல்லப்படுகிற பிரசங்கத்தை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும், வேதத்திலே நாம் தேறினவர்களாய் இருக்க வேண்டும். இந்த கடைசி கால செய்தியில் இருக்கிற அநேகர் இந்த வேதத்தைப் புறக்கணித்துவிட்டு செய்தியைப் படிக்கிறார்கள். அதையும் புரிந்துகொள்ள முடியாது. இதையும் புரிந்துகொள்ள முடியாது. இது நன்றாகத் தெரிந்தால் தான் அது நன்றாகப் புரியும். அதை எத்தனை முறைப் படித்தாலும் இது தெரியாமல் அதைப் புரிந்துகொள்ள முடியாது. செய்தி வட்டாரத்தில் 75% அப்படித்தான் இருக்கிறார்கள். நம்முடைய சபையில் இந்த வேதத்தை வைத்துதான் போதிக்கிறோம். இதின்மேல் வாஞ்சையாயிருங்கள். இதைத் தழுவிக்கொண்டால் இது உங்களைத் தழுவிக்கொள்ளும். இது உங்களை உயர்த்தும். இது தான் உங்களை மேலே கொண்டுசெல்லும். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? இது உங்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். இதுதான் ஜீவன். இதின்மேல் நமக்கு எவ்வளவு வாஞ்சை இருக்கிறதென்று ஆண்டவர் பார்க்கிறார். அவரே வார்த்தையாகத்தான் இருக்கிறார் **(God in printed form)**.

இப்போது செய்தியைக் கவனிப்போம். லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் ஏழு பண்டிகைகளைக் **(7 Feasts)** குறித்து வாசிக்கிறோம்.

1. பஸ்கா பண்டிகை **(Feast of Passover) (**லேவி. 23: 4, 5**)**
2. புளிப்பில்லா அப்பப்பண்டிகை **(Feast of Unleavened Bread) (**லேவி. 23: 6 - 8**)**
3. முதற்பலன்களின் பண்டிகை **(Feast of Firstfruits) (**லேவி. 23: 9 - 14**)**
4. பெந்தெகொஸ்தே பண்டிகை **(Feast of Pentecost) (**லேவி. 23: 15 - 22**)**
5. எக்காளப் பண்டிகை **(Feast of Trumpet) (**லேவி. 23: 23 - 25**)**
6. பாவநிவிர்த்தி பண்டிகை **(Feast of Atonement) (**லேவி. 23: 26 - 32**)**
7. கூடாரப்பண்டிகை **(Feast of Tabernacle) (**லேவி. 23: 33 - 44**)**

இதெல்லாம் நமக்கு மனப்பாடமாய் இருக்க வேண்டும். போதகருக்குத்தான் மனப்பாடமாய் இருக்க வேண்டும் என்றல்ல, தேறின யாவரும் போதகரைப்போல் இருப்பீர்கள்.

இந்த ஏழு பண்டிகைகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது. ஆமென். ஏழாம் மாதம் முதலாம் தேதி எக்காளப் பண்டிகை. அதே மாதம் பத்தாந்தேதி பாவநிவிர்த்தி பண்டிகை. அதே மாதம் பதினைந்தாந்தேதி கூடாரப்பண்டிகை. எல்லாம் ஏழாம் மாதத்தில் வருகிறது. முதல் மாதத்தில் சில பண்டிகைகள் வருகிறது, அதன்பின்பு இரண்டு மாதத்திற்குள் இன்னொரு பண்டிகை வருகிறது. அதன்பின்பு நான்கு மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு ஏழாம் மாதத்தில் மற்றப் பண்டிகைகள் வருகிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் வருஷத்தில் மூன்றுதரம் எருசலேமுக்கு வரவேண்டும். முதலில் பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வருகிறார்கள். பின்பு பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வருகிறார்கள். அதன்பின்பு கூடாரப்பண்டிகைக்கு வருகிறார்கள். இந்த மூன்றுமுறை வரும்போது ஏழு பண்டிகைகளை அவர்கள் ஆசரிக்க முடியும். ஏனென்றால் சில பண்டிகைகள் ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்று வருகிறது. பஸ்கா பண்டிகைக்கு வரும்போது அடுத்த நாளே புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பமாகிவிடும். ஏழு நாள் புளிப்பில்லா அப்பப்பண்டிகை. அதன்பின்பு ஓய்வுநாளுக்கு மறு நாள் ஞாயிற்றுக்கிழமையிலே முதற்பலன்களின் பண்டிகை வந்துவிடும். இந்த மூன்று பண்டிகைகளும் சேர்ந்து இருக்கிறது. ஒரு முறை எருசலேமுக்கு வந்தால் மூன்று பண்டிகைகளை ஆசரித்து

விடுவார்கள். அதிலிருந்து ஐம்பது நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே பண்டிகை வருகிறது. தங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்று இருக்கிறவர்கள் வீட்டிற்குச் சென்றுவரலாம். அதன்பின்பு நான்கு மாதங்கள் இடைவெளிக்குப் பின்பு ஏழாம் மாதம் வரும்போது மற்ற மூன்று பண்டிகைகளும் சேர்ந்து வருகிறது. முதலாம் தேதி எக்காளப் பண்டிகை, ஒன்பது நாட்களுக்குப் பிறகு பாவநிவிர்த்தி பண்டிகை, அதன்பின்பு ஆறு நாட்களுக்குப் பின்பு பதினைந்தாம் தேதி கூடாரப்பண்டிகை. அதை ஏழு நாட்கள் ஆசரிக்கிறார்கள். இவை எல்லாம் அங்கே இருக்கிறது.

வேதத்தைப் படித்தால் ஒரு மாணாக்கனைப்போல் படிக்க வேண்டும். வேதாகமக் கல்லூரியில் **(Bible College)** படிக்கிறவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்கள் தெரியாது. நம்முடைய செய்தியில் இருக்கிற போதகர்கள் பெரும்பான்மையானோர் செய்தி புஸ்தகத்தையே படிப்பதினால் அவர்களுக்கு வேதம் தெரிகிறதில்லை. ஆனால் நான் கர்த்தருடைய கிருபையினால் முறைப்படி வேதத்தைப் படிக்கிறேன். வேதாகமக் கல்லூரியில் படிக்கிற மாதிரியும் தெரியும், தீர்க்கதரிசியின் செய்தியின்படியும் தெரியும். அப்போதுதான் சிறந்த போதகராக இருக்க முடியும். போதக சமர்த்தனாக இருக்கவேண்டும். வேதத்தை நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அந்த பின்னணி என்ன, போன்ற எல்லாம் நமக்குத் தெரியவேண்டும்.

இஸ்ரவேலின் ஆண்மக்கள் எல்லாரும் வருஷத்தில் மூன்றுதரம் எருசலேமுக்கு வரவேண்டும். அவர்கள் வீட்டிற்கு தாழ்ப்பாள் போட்டாலும் போடாவிட்டாலும் யாருமே வந்து திருடமாட்டார்கள். கர்த்தர் அவர்கள் வீட்டைப் பாதுகாக்கிறார். இப்படி ஏழு பண்டிகைகளையும் ஆசரிக்க வேண்டும். அப்படி ஆசரிக்கவில்லை என்றால் அவர்கள் பேர்கள் அறுப்புண்டுபோகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவ புஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்படும். இப்படி கர்த்தர் அவர்களுக்கு ஒரு பிரமாணத்தையும் கட்டளையையும் **(Law and Ordinance)** கொடுத்திருக்கிறார். அதை ஒழுங்காக அவர்கள் கடைப்பிடித்தால் அவர்கள் நாடு செழிப்பாக இருக்கும். விரோதிகளெல்லாம் பயந்து ஓடிவிடுவார்கள். ஒருவரும் அவர்கள் பக்கத்தில் வரமுடியாது. ஜெயத்தின்மேல் ஜெயம் கிடைக்கும். செழிப்பு, ஆசீர்வாதம், பாதுகாப்பு எல்லாமே அவர்களுக்கு இருக்கும். அந்த கானான் தேசத்தில் **(Land of Canaan)** எல்லா ஆசீர்வாதமும் நிலைத்திருக்கும்.

அதேபோல இன்றைக்கு ஆண்டவர் நமக்கு இந்த நேரத்திற்குரிய செய்தியைத் **(Message of The Hour)** தந்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில் அது நிழலாகவும் மாதிரியாகவும் **(Shadows and Types)** இருக்கிறது. ஆனால் நமக்கு இந்த ஏழு பண்டிகைகளும் உண்மையானதாக **(reality)** இருக்கிறது. நாம் அதை நினைவுகூர்ந்து அதின் அருமையை அறிந்து, “கர்த்தர் எதற்காக இதெல்லாம் செய்திருக்கிறார்?, விளையாட்டிற்காகவா? அல்லது உலகப்பிரகாரமாக, பாரம்பரியமாக பண்டிகை கொண்டாடுவதைப் போல கேளிக்கைக்காகவா?” என்று நினைத்து, அதில் ஒரு அர்த்தம் இருக்கிறது, ஒரு வெளிப்பாடு இருக்கிறது, நமக்கு அதில் சம்மந்தம் இருக்கிறது என்றும், நமக்குக் கர்த்தரோடு கூட ஒரு ஐக்கியத்தைக் குறிக்கிறது என்றும் தியானம்பண்ணினால் நன்றாக இருப்போம். உங்கள் பிள்ளைகளும் நன்றாக இருப்பார்கள். தலையைக் கீழே போட்டுக்கொண்டிராமல் வேதத்தைப் பார்த்துக் குறிப்பெடுத்தால் மிகவும் நல்லது.

எவ்வளவு நாம் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அவ்வளவாக ஆண்டவர் நம்மை உயர்த்துவார். இதைப் பற்றி கவலையீனமாக இருந்தால் ஆண்டவர் அப்படியே நம்மைக் கைவிட்டுவிடுவார். எல்லா ஆசீர்வாதத்தையும் இதற்குள் வைத்துதான் தந்திருக்கிறார். அதற்கு ஒரு போதகரை வைத்து அந்த போதகர் விளக்கம் சொல்லுகிறார். கர்த்தர் இந்த கடைசி காலத்தில் அப்படி செய்யும்போது இதை அந்நிய காரியமாக நினைத்து ஏதோ ஒன்றை போதகர் பிரசங்கம் பண்ணுகிறார், அவருக்குத் தெரிந்ததைச் சொல்லிவிட்டுப் போகிறார் என்று நினைத்தால் ஒரு நாளில் நாம் தேவனுக்கு முன்பாக நின்று கணக்கு ஒப்புவிக்க வேண்டியதாய் வரும். ஆகையால் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கர்த்தர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்துடன் **(purpose)** செய்கிறார். கடைசி காலத்திலே அது உண்மையாக **(reality)** மாறுகிறது. எல்லா மாதிரியும் அடையாளங்களும் **(Shadows and Types)** உங்கள்மேல் நிறைவேறுகிறது. கடைசி கால மணவாட்டியின்மேல் நிறைவேறுகிறது. எல்லாமே இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாய் இருக்கிறது. ஆமென்.

ஏழு முத்திரைகளுக்குள் **(7 Seals)** எல்லாமே இருக்கிறதென்று சகோ. பிரன்ஹாம் **(Bro. Branham)** சொல்லுகிறார். முதலாவது ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றைத் திறக்கிறார். அப்பொழுது ஒரு தூதன் **(messenger)** அந்த இரகசியத்தைப் **(mystery)**

பெற்றுக்கொள்ளுகிறான். பின்பு அவன் எக்காளம் **(trumpet)** ஊதுகிறான். எக்காளம் ஊதும்போது ஒரு கூட்டமான ஜனங்கள் அந்த செய்தியைக் கேட்டு அந்த வார்த்தையின் கீழ் வருகிறார்கள். இன்னும் அநேகர் அந்தச் செய்தியைப் புறக்கணிக்கிறார்கள். அந்தக் கீழ்ப்படியாத மக்கள்மேல் ஒரு கோபகலசம் **(vial)** ஊற்றப்படுகிறது. ஒரு சபைக்காலம் முடிவடைகிறது. பின்பு அடுத்த சபைக்காலம் **(Church Age)** பிறக்கிறது.

முத்திரைகளிலிருந்துதான் எல்லாமே வருகிறது. முதலில் முத்திரைகள் **(Seals)**. இரண்டாவது எக்காளங்கள் **(Trumpets)**. அதன்பின்பு கோபகலசங்கள் **(Vials)**. இவை எல்லாமே இந்த ஏழு பண்டிகைகளில் அடங்கியிருக்கிறது. எல்லாம் எதைக் குறிக்கிறது? மீட்பின் திட்டத்தைக் **(Plan of Redemption)** குறிக்கிறது. ஆமென். அந்த மீட்பின் திட்டமானது இந்த புஸ்தகத்திற்குள் முத்திரைப்போடப்பட்டிருக்கிறது **(It was the Plan of Redemption that was sealed up in the Book)**.

அநேகர் இந்த செய்தி வட்டாரத்தில் “**ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு**” என்ற புஸ்தகத்தைத்தான் “ஏழு முத்திரைகள்” என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 75% பேர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது இல்லை இந்த வேத புஸ்தகம்தான் **(Bible)** ஏழு முத்திரைகள் புஸ்தகம் **(7 Seals Book)**. இது தெரியாமல் அதைப் போய் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இது தெரிந்தால் தான் அது புரியும். தமிழ் நாட்டில் 75% அப்படி இருக்கிறார்கள். இந்த வேத புஸ்தகம்தான் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்தது **(Sealed Book)**. முத்திரைகள் திறக்கப்பட்டப் பின்பு இது நமக்கு திறக்கப்பட்ட புஸ்தகமாய் **(Open Book)** மாறியிருக்கிறது. அல்லேலூயா. மற்றவர்களுக்கு இது முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாயிருக்கிறது. எத்தனை முறை படித்தாலும் புரியாது. எவ்வளவு படித்திருந்தாலும், எத்தனை பட்டம் வாங்கியிருந்தாலும், வேதாகமக் கல்லூரியில் பயின்றிருந்தாலும் புரியாது.

முத்திரைகள் திறக்கப்பட்டப் பின்பு இந்த வேத புஸ்தகம் நமக்குத் திறக்கப்பட்ட புஸ்தகமாயிருக்கிறது. இது எதைக் குறிக்கிறது? இயேசுகிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தைக் **(Plan of Redemption)** குறிக்கிறது. ஆமென். தேவன் தம்முடைய மனதில் மூன்று இரகசியங்களை வைத்திருந்தார் **(God had great threefold secret in the back part of His mind)**.

ஆண்டவருக்கு ஒரே ஒரு நோக்கம் தான். என்ன நோக்கம்? மீட்பு **(Redemption)**. இழந்துபோனதை மறுபடியும் அந்த ஸ்தானத்திற்குக் கொண்டுவருவது தான் மீட்பு. நம்முடைய பொருளை நாம் மார்வாடி கடையில் அடைமானம் வைக்கிறோம். பின்பு முதலையும் வட்டியையும் கொடுத்து அதை மீட்டுக்கொள்ளும்போது அது மறுபடியும் நம்மிடத்தில் வருகிறது. அதுதான் மீட்பு. அதேபோல ஒரு நாளில் நாம் ஆண்டவருக்குச் சொந்தமாக இருந்தோம். பாவத்தின் கீழாக விற்கப்பட்டு இழக்கப்பட்டுப்போனோம். இப்போது கர்த்தர் நம்மை மீட்டுக்கொள்கிறார். உலகம் இழக்கப்பட்டுப்போனது, இந்த உலகத்தைக் கர்த்தர் மீட்டுக்கொள்கிறார். இந்த பூமிக்கும் மீட்பின் திட்டம் உண்டு. ஒரு தனி மனிதனுக்கு மீட்பின் திட்டம் உண்டு. சபைக்கு மீட்பின் திட்டம் உண்டு. அது வேறு யாருக்கும் அல்ல. நமக்கு மாத்திரம்தான் உண்டு. அல்லேலூயா.

அதைத்தான் இந்த வேத புஸ்தகம் நமக்குச் சொல்லுகிறது. இது எப்படி இருக்கிறதென்றால் ஒரு குறுக்கெழுத்து புதிர் **(Jigsaw Puzzle)** போல இருக்கிறது. வரிசைக் கிரமம் இல்லாமல் மாற்றி மாற்றி எழுதப்பட்ட வார்த்தைகளைச் சரியாக எழுத வேண்டும். பழைய ஏற்பாட்டில் 39 புஸ்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புஸ்தகங்களும் ஆக 66 புஸ்தகங்கள் இருக்கிறது. இதிலும் அப்படித்தான் இங்கேயும் அங்கேயும் சிதறிப்போடப்பட்டிருக்கிறது. பரிசுத்தஆவியானவர் அதை ஒன்று சேர்க்கிறார். அல்லேலூயா. தீர்க்கதரிசியும் தன்னுடைய செய்தியில் சிதறி சிதறித்தான் போட்டிருக்கிறார். போதகர் ஒரு அபிஷேகத்தின் **(Anointing)** கீழ் அதை ஒன்று சேர்க்கிறார். சகோ. பிரன்ஹாம் ஏழு எக்காளங்களைப் பற்றி பேசினாரா? அதைப் பேசவேண்டுமென்று கூட்டத்தை ஒழுங்கு செய்தார். ஆனால் அதற்குப்பின்பு அதைப் பேசவில்லை. "நீ ஆறாம் முத்திரையைப் பேசும்போதே இயற்கைக்கு மேம்பட்ட **(Supernatural)** முறையில் ஏழு எக்காளங்களைப் பேசிவிட்டாய்" என்று கர்த்தர் சொன்னார்.

இப்போது கர்த்தர் ஐந்து விதமான ஊழியத்தில் **(Fivefold Ministry)** இருக்கிற அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகர்களுக்கு **(Anointed Preachers)** அந்த வெளிப்பாட்டைக் **(Revelation)** கொண்டுவருகிறார். அல்லேலூயா. எங்கே இருக்கிறது? இந்த புஸ்தகத்தில்தான் **(Bible)** இருக்கிறது. எப்படி இருக்கிறது? இங்கேயும் அங்கேயும் இருக்கிறது. அதை நாம் ஒன்று சேர்க்கவேண்டும். சிலருக்கு சில பகுதிகளை மாத்திரம் ஒன்று சேர்க்கமுடியும். ஓரத்தில் இருக்கிற எழுத்துக்களை ஒன்று சேர்க்கமுடியும்

ஆனால் மத்தியில் இருக்கும் எழுத்துக்களை ஒன்று சேர்க்கமுடியாது. சிறு பிள்ளைகளுக்கு வீடு கட்டும் விளையாட்டுப் பொருட்கள் **(Blocks)** மொத்தமாக இருக்கும். எப்படிக் கட்டவேண்டும் என்று சில மாதிரிகளும் கொடுக்கப்பட்டிருக்கும். பிள்ளைகள் அதைச் சரியாக அடுக்கிவைத்தால் அழகான வீடு வந்துவிடும். புத்திக்கூர்மையுள்ள **(Intelligent)** பிள்ளைகளுக்கு அதை எப்படி அடுக்கவேண்டுமென்றுத் தெரியும். மற்ற பிள்ளைகளுக்கு அதை அடுக்கத் தெரியாது. மற்ற பிள்ளைகள் சிலவற்றை அடுக்க முடியும் ஆனால் மத்தியில் வரும் பகுதியை அடுக்க முடியாது. ஒரே தேவன் **(One God)** எல்லாருக்கும் தெரியலாம். இயேசுகிறிஸ்து நாமத்தில் ஞானஸ்நானம் **(Baptism in the Name of Jesus Christ)**, சர்ப்பத்தின் வித்து **(Serpent Seed)**, பெண்கள் பிரசங்கம்பண்ணக்கூடாது போன்றவைத் தெரியலாம். ஆனால் மத்தியில் உள்ளதை ஒன்று சேர்க்கத் தெரியாது. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு **(Revelation of Seven Seals)** தெரியாது. ஏழு இடிமுழக்கங்கள் **(Seven Thunders)** தெரியாது. புத்திரசுவிகாரம் **(Adoption)** என்றால் தெரியாது. இன்றைக்கு நாம் எல்லாவற்றையும் அறிய வேண்டியதாயிருக்கிறது. எல்லாவற்றையும் நாம் சரியாகப் பொருத்தினால் தான் முழுப் படமும் **(Whole Picture)** நமக்குக் கிடைக்கும். இன்றைக்கு முழுப் படமும் வரவேண்டிய நேரம். பரிசுத்தஆவியானவர் வேதத்தில் 66 புஸ்தகத்தில் சிதறிப்போட்டதை நாம் ஒன்று சேர்க்க வேண்டும். இந்த வேதாகமம் குறுக்கெழுத்துப் புதிராக இருக்கிறது என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். அதைச் சரியாகப் பொருத்தினால் அது ஒரு படத்தை வெளிப்படுத்துகிறது **(When the pieces are correctly fitted It will reveal a picture)**.

மீட்பின் திட்டம்தான் தேவனுடைய நோக்கம். எத்தனைப்பேர் அந்த திட்டத்தில் இருக்கிறோம்? நான் மீட்கப்பட்டிருக்கிறேன் என்று சொல்லவேண்டும். இந்த வார்த்தை கிறிஸ்தவர்கள் யார் வாயிலாவது வருகிறதா என்று பார்த்தால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் வாயில் வராது. நாம் பார்த்ததில் அவ்விதமாயிருக்கிறது. “தீர்க்கதரிசி” “தீர்க்கதரிசி”, “மணவாட்டி” “மணவாட்டி”, “செய்தி” “செய்தி” என்றுதான் சொல்லுகிறார்கள். மீட்பின் திட்டம்தான் தீர்க்கதரிசியின் செய்தியில் இருக்கிறது. நான் மீட்கப்பட்டிருக்கிறேன் **(I am redeemed)** என்று சொன்னால் பிசாசு ஓடிவிடுவான். அந்த வெளிப்பாடு இல்லாமல் அப்படிச் சொல்லமுடியாது.

முதலாவது பண்டிகை: பஸ்கா பண்டிகை **(The Feast of Passover)**. **(**லேவி. 23: 4, 5**)**. ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியை ஆபிப் மாதம் 14ம் தேதியிலே அடித்து அதின் இரத்தம் அங்கே பூசப்படுகிறது. "நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்துபோவேன்" **(I will see the blood and Passover thee)** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் அது பஸ்கா **(Passover)** என்று அழைக்கப்படுகிறது. அந்த இரத்தம் பூசப்படும்போது அங்கே யாரும் மரிக்கப்போகிறதில்லை. அந்த ஆட்டுக்குட்டி கிறிஸ்துவைக் குறிக்கிறது **(That Lamb was Christ)**. அல்லேலூயா. அது இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பதைக் குறிக்கிறது. **நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே (I கொரி. 5: 7)**. நமக்காக பலியான பஸ்கா ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. ஆமென்.

இரண்டாவது பண்டிகை: புளிப்பில்லா அப்பப்பண்டிகை **(The Feast of Unleavened Bread)**. **(**லேவி. 23: 6-8**)**. இந்தப் பின்னணித் தெரிந்தால் தான் எக்காளப் பண்டிகை என்னவென்றுத் தெரியும். அவர்கள் ஆபிப் மாதம் 14ம் தேதி ஆட்டுக்குட்டியை அடித்து இரத்தத்தை நிலைக்காலில் பூசி அங்கே இருக்கிறார்கள். பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி எருசலேமுக்குப் போய் எல்லாரும் அதைச் செய்யவேண்டும். அவர்கள் அப்படிச் செய்தார்கள். இயேசுகிறிஸ்து வரும் வரைக்கும் சுமார் 2000 வருடங்களாக அதைச் செய்தார்கள். ஆட்டுக்குட்டியை அடித்து அதின் இரத்தத்தை கிண்ணியில் எடுத்து ஈசோப்புக் கொழுந்தினால் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து உள்ளே இருந்தார்கள். அது எதைக் குறிக்கிறது? ஒரு நாளில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசினபின்புதான் எகிப்திலிருந்து அவர்கள் விடுதலையானார்கள் என்பதைக் குறிக்கிறது. அதை நினைக்கும்படியாக அது செய்யப்படுகிறது. இவ்வளவுதான் அவர்களுக்குத் தெரியும். அந்த நாளிலிருந்து வீட்டில் ஏழு நாட்கள் புளித்தமாவு இருக்கக்கூடாது. அதை அவர்கள் சரியாகச் செய்யவேண்டும். நூற்றுக்கணக்கான வருடங்களாக அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். பழைய மாவை விலக்கிப் போடவேண்டும்.

ஏன் அவர்கள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரித்தார்கள்? எகிப்தைவிட்டுப் புறப்படவேண்டும் என்ற கட்டளை இஸ்ரவேல் ஜனங்களுக்கு நடுராத்திரியிலே வந்தது. நடுராத்திரியாயிருந்ததினால் அவர்கள் பிசைந்து வைத்த மாவு புளிக்கவில்லை. புளிப்பதற்கு

முன்னதாகவே அவர்கள் எகிப்தைவிட்டுப் போய்விட்டார்கள். திடீரென்று புறப்பட்டார்கள் **(Sudden Departure)**. "அதை நினைக்கும்படியாக நீங்கள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கவேண்டும். எகிப்திலிருந்து ஆண்டவர் உங்களை திடீரென்று விடுதலையாக்கிவிட்டார். பஸ்கா பண்டிகையைத் தொடர்ந்து இந்த புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஏழு நாட்கள் ஆசரிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டது. உடனே அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? பின்னோக்கிப் பார்க்கிறார்கள். அப்போதுதான் மாவைப் பிசைந்து வைத்திருந்தார்கள். 10 மணிக்கு மாவைப் பிசைந்து வைத்திருக்கிறார்கள். 12 மணிக்கு அந்த இராத்திரியிலேயே புறப்பட்டுவிட்டார்கள். அது புளிக்கவேண்டும் என்றால் காலை 4 அல்லது 5 மணியாக வேண்டும். மாவு புளிப்பதற்கு முன்னாலேயே புறப்பட்டுவிட்டார்கள் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. நமக்கு எதற்கு அடையாளமாயிருக்கிறது? இயேசுகிறிஸ்து அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது **(This is My Body)**" என்றார். அப்பம் இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்கும் திராட்சரசம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கும் அடையாளமாயிருக்கிறது. இது எதைக் குறிக்கிறது? இராப்போஜனத்தைக் **(Communion)** குறிக்கிறது. அதுவும் இயேசுகிறிஸ்துவின் மரணத்தைத்தான் குறிக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் நாம் இராப்போஜனத்தில் பங்குபெறுகிறோம். 2000 வருடங்களுக்கு முன்பே அவர் நமக்காக அப்பமாக்கப்பட்டார். கல்வாரியில் தேவ கோபாக்கினையின் அக்கினியினால் அவர் நமக்காகப் பலியானார், மரித்தார், அப்பமாக்கப்பட்டார் என்று நாம் அறிந்திருக்கிறோம். இதுதான் புளிப்பில்லா அப்பப்பண்டிகை.

மூன்றாவது பண்டிகை: முதற்பலன்களின் பண்டிகை **(The Feast of Firstfruits)**. **(**லேவி. 23: 9 - 14**)**. இதற்கு என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், ஓய்வுநாளுக்கு **(**சனிக்கிழமை**)** அடுத்த நாள் **(**ஞாயிற்றுக்கிழமை**)** முதற்பலனைக் கொண்டுவந்து தேவ சமுகத்தில் அசைவாட்டவேண்டும். கோதுமை அங்கே விளைந்து இருக்கும். ஆசாரியன் போய் எந்த இடத்தில் நன்றாக விளைந்திருக்கிறது, எங்கே கதிர் முற்றியிருக்கிறது என்று பார்த்து அந்த இடத்தைக் குறித்துவிட்டுப் போய்விடுவான். பின்பு ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் அதை அறுத்துக்கொண்டு வருவார்கள். அதுதான் முதலில் விளைந்திருக்கிறது. அந்த கதிர்க்கட்டை ஆசரியன் தேவ சமுகத்தில் அசைவாட்டவேண்டும்.

பின்பு எல்லா விளைச்சலையும் ஆண்டவர் அங்கீகரிக்கிறார். இயேசுகிறிஸ்து மரித்தோரின் முதற்பலனானார் **(He is the Firstfruit of Resurrection)**.

**I கொரி 15: 20**

20. கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

அந்த கதிர்க்கட்டு இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. அவர் தான் முதலாவது முதிர்ச்சியடைந்தவர் **(He is the first Matured Son)**. முதற்பலன் அவர்தான். அவர் உயிர்த்தெழுந்த பின்பு பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்தார்கள். என்றைக்கு? ஞாயிற்றுக்கிழமை **(Sunday)**. இயேசுகிறிஸ்து என்றைக்கு உயிர்த்தெழுந்தார்? ஞாயிற்றுக்கிழமை. அதற்காகத்தான் நாம் ஞாயிற்றுக்கிழமையில் சபை கூடிவருகிறோம். முதற்பலன்களின் பண்டிகை எதைக் குறிக்கிறது? இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் **(Resurrection of Jesus Christ)** குறிக்கிறது. அல்லேலூயா.

நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களானால் ஆதாமிலிருந்து ஆதாம் **(Adam to Adam)** வரை, வித்திலிருந்து வித்து **(Seed to Seed)** வரை பார்க்கமுடியும். ஆதாம் ஒரு முதிர்ச்சியடைந்த மனுஷன் **(Adam was a matured man)**. அவனைத் தேவன் தம்முடைய சாயலாய் உண்டாக்கினார்.

**ஆதியாகமம் 1: 26, 27**

26. பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.
27. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

முதலாவது அவனை ஆவியின் ரூபமாக **(spirit man)** உண்டாக்கினார். பின்பு அவனுக்கு ஒரு சரீரத்தைக் கொடுக்கும்போது அவன் பரிபூரண மனிதனானான் **(perfect man)**. அவன் தேவனுடைய சாயலாயிருந்தான் **(Image of God)**. முதலாவது முதிர்ச்சியடைந்த குமாரன் ஆதாம். அவன் விழுந்துபோனான். அதன்பின்பு வந்தவர்களெல்லாம் அந்த வித்து **(Corn)** கிடையாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவர்தான் அந்த

முற்றின வித்தாய் **(Corn)** இருக்கிறார். **"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்"** என்று யோவான் 12:24ல் இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஆதாம் ஒரு வித்தாயிருக்கிறான். அந்த வித்து விழுந்துபோனது. இப்பொழுது வித்து மறுபடியும் வந்திருக்கிறது. இயேசுகிறிஸ்து அந்த வித்தாயிருக்கிறார். வித்திலிருந்து வித்து வரை **(From Seed to Seed)**. ஆதாமிலிருந்து இயேசுகிறிஸ்து வரை **(From Adam to Jesus Christ)**. கீழே போட்ட வித்துதான் அறுவடை நேரத்தில் **(Harvest Time)** மேலே வரும். அதே வித்துதான் மேலே வருகிறது. ஆதாம் விழுந்து போனான். இயேசுகிறிஸ்து இப்பொழுது எழும்பியிருக்கிறார்.

முதல் மூன்று பண்டிகைகள் **(**பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை, முதற்பலன்களின் பண்டிகை**)** இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைக் **(Ministry of Jesus Christ)** குறிக்கிறது. அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் **(Death, Burial, Resurrection)** குறிக்கிறது. சுவிஷேசம் **(Gospel)** என்றால் என்ன? இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி கூறுவதுதான் சுவிஷேசம். நற்செய்தி **(Good News)** அதுதான். பஸ்கா பண்டிகை சிலுவையையும், புளிப்பில்லா அப்பப்பண்டிகை அவருடைய மரணத்தை நினைவுகூரும் இராப்போஜனத்தையும், முதற்பலன்களின் பண்டிகை அவருடைய உயிர்த்தெழுதலையும் குறிக்கிறது. அல்லேலூயா.

<u>நான்காவது பண்டிகை</u>: <u>பெந்தெகொஸ்தே பண்டிகை</u> **(The Feast of Pentecost)** **(**லேவி. 23: 15 - 22**)**. இந்த பண்டிகை ஏழு வாரத்திற்கு அடுத்த நாள் வருகிறது. முதற்பலன்களின் பண்டிகையிலிருந்து ஏழு வாரங்கள் **(7X7=49 days)** முடிந்து ஐம்பதாவது நாள் பெந்தெகொஸ்தே பண்டிகை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களில் பரலோகத்திற்குப் போய்விட்டார். பின்பு மேலறையில் பத்து நாட்கள் காத்திருந்தார்கள். அப்பொழுது பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**<u>அப்போஸ்தலர் 2: 1</u>**

1. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து சரியாக ஐம்பதாவது நாள். அன்றைக்கு என்ன பண்டிகை கொண்டாடுகிறார்கள்? பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாட வந்திருக்கிறார்கள். ஆனால் உண்மையான பெந்தெகொஸ்தே அங்கே மேலறையில் நடந்துகொண்டிருக்கிறது. இவர்கள் இன்னும் பாரம்பரியத்தில் **(tradition)** இருக்கிறார்கள். இந்த பெந்தெகொஸ்தே அங்கே நிறைவேறிக்கொண்டிருக்கிறதை அறியாமலிருந்தார்கள். அதுபோல இன்றைக்கு நிறைய பேருக்குச் சத்தியம் தெரியாது. இந்த செய்தியில் இருக்கும் நிறைய பேருக்கு ஆண்டவர் இப்பொழுது என்ன செய்கிறார் என்று தெரியாது. அவர்களுடைய போதகர் அவர்களை அப்படி வழிநடத்தவில்லை. அவர்களுக்கு அந்தப் பயிற்சி **(training)** கொடுக்கப்படுவதில்லை. இங்கே அந்த பயிற்சி கொடுக்கப்படுகிறது. அங்கே பெந்தெகொஸ்தே பண்டிகை வரும்போது அவர்கள் அதை உணரவில்லை. அங்கே உண்மையான பெந்தெகொஸ்தே நடந்துகொண்டிருக்கிறது. சரியாக ஐம்பதாவது நாளில் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. ஆனால் அவர்கள் பாரம்பரியமாகப் பண்டிகை கொண்டாட வந்திருக்கிறார்கள். அவர்கள் யூத பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும்போது உண்மையாக அங்கே நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாரும் அங்கே வந்து பார்க்கிறார்கள்.

அன்றைக்கு என்ன செய்யவேண்டுமென்று எழுதியிருக்கிறது?

**லேவி. 23: 17**

17. நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவந்து,

வித்தியாசமாக ஒரு காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. புளிப்பான இரண்டு அப்பங்களைக் கொண்டுவர வேண்டும். புளிப்பே இருக்கக்கூடாது என்று பார்த்தால் இங்கே புளிப்பு வேண்டும் என்று சொல்லியிருக்கிறதே! புளிப்பு எதைக் குறிக்கிறது? பாவத்தைக் குறிக்கிறது **(Leaven represents sin)**. ஆனால் இங்கே புளிப்பாகச் செய்துகொண்டு வரவேண்டும், தகனபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் என்றுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றல்ல இரண்டு அப்பங்கள். அது எதைக் குறிக்கிறது? யூதர்களையும் புறஜாதிகளையும் **(Jews and Gentiles)** குறிக்கிறது. பெந்தெகொஸ்தே பண்டிகை வரும்போது இரண்டு அப்பங்களைக் கொண்டுவருகிறார்கள்.

பேதுருவும் அப்போஸ்தலனாகிய பவுலும் முதலாவது யூதர்களுக்குத்தான் பிரசங்கம்பண்ணினார்கள். அப்போஸ்தல காலத்தில் யூதர்கள்தான் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களாய் இருந்தார்கள். அதன்பின்பு புறஜாதிகள் அதிகமாகிவிட்டார்கள். யூதர்கள் வரவில்லை. இரண்டு அப்பங்கள் யூதர்களையும் புறஜாதிகளையும் குறிக்கிறது.

புளிப்பு பாவத்தைக் குறிக்கிறது. அதுபோல எல்லாருமே பாவிகள்தான். நம்மெல்லாரும் பாவிகள்தான். எத்தனைப்பேர் ஒப்புக்கொள்கிறோம்? ஆமென். நாம் பாவத்தில்தான் பிறந்திருக்கிறோம். ஆனால் அந்த அப்பம் தகனிக்கப்படவேண்டும். அக்கினி **(Fire)** அதன்மேல் வரவேண்டும். அல்லேலூயா. அக்கினி வந்ததா? வந்தது. என்றைக்கு வந்தது? பெந்தெகொஸ்தே நாளில் வந்தது. புளிப்புள்ள அப்பங்கள் மேலறையில் காத்துக்கொண்டிருக்கின்றன. அக்கினி வந்து அவைகளைப் பட்சித்தது. பரிசுத்தஆவியின் அபிஷேகம் **(Baptism of the Holy Spirit)** வந்தது. அல்லேலூயா.

நாம் பாவத்தில் பிறந்தோம், அக்கிரமத்தில் உருவாக்கப்பட்டோம், பொய் பேசுகிறவர்களாய் உலகத்தில் வந்தோம். பலவிதமான பாரம்பரியங்களிலிருந்து நாம் வந்திருக்கிறோம். ஆனால் அக்கினி வரும்போது நாம் புதுப்பிறப்பை **(New Birth)** அடைகிறோம். நாம் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாய் **(Sons & Daughters)** மாறுகிறோம். நாம் ஒருபோதும் பாவத்திற்கு அடிமையானவர்களல்ல. நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். ஆமென். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? அந்த நூற்றிருபது பேர் புளிப்புள்ள அப்பம் தான். அக்கினி வந்தவுடன் மறுபடியும் பிறந்துவிட்டார்கள். அது தகனிக்கப்படவேண்டும். பரிசுத்தஆவியின் அபிஷேகம் அதின்மேல் வரவில்லையென்றால் அது அங்கீகரிக்கப்படமாட்டாது. இன்றைக்கு நம்மேல் பரிசுத்தஆவியின் அபிஷேகம் வந்திருக்கிறது. அல்லேலூயா. அன்றைக்கு அசைவாட்டும் கதிர்க்கட்டு இன்றைக்கு இரண்டு அப்பங்களாக மாறியிருக்கிறது. அதின்மேல் பரிசுத்தஆவி வருகிறது. ஆமென். பெந்தெகொஸ்தே பண்டிகைக்கும் எக்காளப் பண்டிகைக்கும் நிறைய இடைவெளி இருக்கிறது. இதெல்லாம் முதலாம் மாதத்தில் நடக்கிறது. அதன்பின்பு ஏழாம் மாதம் முதலாந் தேதி எக்காளப் பண்டிகை வருகிறது.

<u>ஐந்தாவது பண்டிகை</u>: <u>எக்காளப் பண்டிகை</u> **(The Feast of Trumpets)** **(**லேவி. 23: 23, 24**)**. அது எதைக் குறிக்கிறது? இஸ்ரவேலர் ஒன்று சேர்க்கப்படுவதைக் **(Gathering of Israel)** குறிக்கிறது. இஸ்ரவேல் நாட்டின் பல கோத்திரங்களில் இருந்து பல திசைகளிலிருந்து வந்திருந்தவர்கள் அனைவரும் பெந்தெகொஸ்தே பண்டிகை முடிந்தவுடன் அவரவர் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். இப்பொழுது மறுபடியும் ஒன்று கூடுகிறார்கள். முதலாந்தேதி ஆசரியர்கள் எக்காளத்தை ஊதும்போது எல்லாரும் மறுபடியும் அங்கே எருசலேமுக்கு வரவேண்டும். எக்காளச் சத்தம் இஸ்ரவேல் ஜனங்களை மறுபடியும் எருசலேமிலே கூட்டுகிறது **(The sounding of the trumpet gathers Israel in Jerusalem)**.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டதிலிருந்து அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குப் போகும்வரைக்கும் உள்ள இடைவெளி தான் ஏழு சபைக்காலங்கள். இப்போது நாம் என்ன பண்டிகையில் இருக்கிறோம்? பெந்தெகொஸ்தே பண்டிகையில் இருக்கிறோம். பரிசுத்தஆவி ஊற்றப்பட்டதிலிருந்து அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குப் போகும்வரைக்கும் பெந்தெகொஸ்தே பண்டிகையை அனுசரிக்கிறோம்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவி ஊற்றப்படுகிறது. ஏழு சபைக்காலங்களில் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. புளிப்புள்ள அப்பங்கள்மேல் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டு அந்த அப்பங்களைத் தேவன் அங்கீகரித்தார். அவர்கள் மறுபடியும் **(Newbirth)** பிறந்தார்கள். நாம் புது சிருஷ்டியாய் மாறியிருக்கிறோம். அல்லேலூயா. பரிசுத்தஆவியைப் பெறாதவர்கள் புதுப்பிறப்பை அடையவில்லை.

ஏழு சபைக்காலங்கள் இருக்கும்போது இஸ்ரவேல் குருடாக்கப்பட்டிருக்கிறது **(Israel is blinded during 7 Church Ages)**. நம்முடைய கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் மேசியாவை புறக்கணித்தார்கள் **(They rejected the Messiah)**. பஸ்காவைப் புறக்கணித்தார்கள் **(They rejected the Passover)**. புளிப்பில்லா அப்பத்தை புறக்கணித்தார்கள் **(They rejected the Unleavened Bread)**. முதற்பலனின் பண்டிகையாகிய உயிர்த்தெழுதலைப் புறக்கணித்தார்கள் **(They rejected the Resurrection)**. பெந்தெகொஸ்தே நாளைப் புறக்கணித்தார்கள் **(They rejected the Day of Pentecost)**. நாம் இன்றைக்கு பெந்தெகொஸ்தே பண்டிகையில் இருக்கிறோம். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? **"இந்த மனுஷனுடைய**

**இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக"** என்று சொன்னார்கள் (மத்தேயு 27: 25). அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அந்த இரத்தப்பழி அவர்கள்மேல் வந்தது. கி.பி 70ல் தீத்து ராயன் **(Caesar Titus)** வந்து எருசலேமைத் தரைமட்டமாக்கினான். தேவாலயம் இடிக்கப்பட்டது. அவர்கள் உலகத்தின் எண்பது நாடுகளில் சிதறடிக்கப்பட்டுப் போனார்கள். அவர்கள் அப்படி சிதறடிக்கப்பட்டு எருசலேம் பாழாய்க் கிடக்கும்போது துருக்கியர்கள் வந்து அதைக் கைப்பற்றிக்கொண்டார்கள். முஸ்லிம்கள் அதைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

இன்றைக்கு கர்த்தர் நம்முடனே ஈடுபடுகிறார். அல்லேலூயா. எவ்வளவு காலமாக? ஏழு சபைக் காலங்களாக. சுமார் 1900 வருடங்களாக கர்த்தர் புறஜாதிகளோடு ஈடுபடும்போது அது பெந்தெகொஸ்தே பண்டிகையாக இருக்கிறது. நாம் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்று மறுபடியும் பிறந்து தேவனுடைய குமாரரும் குமாரத்தியுமாக மாறுகிறோம். அல்லேலூயா. நாம் ஒருபோதும் பாவிகளல்ல. பாவத்திற்கு அடிமைகளல்ல. தேவனுடைய குமாரரும் குமாரத்தியுமாக இருக்கிறோம் **(Sons & Daughters of God)**. ஆனால் கர்த்தர் அவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருந்தார். "நீங்கள் பூமியின் கடைமுனைமட்டும் சிதறடிக்கப்பட்டாலும் நான் உங்களை மறுபடியும் ஒன்று சேர்ப்பேன்" என்ற வாக்குத்தத்தம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த வாக்குத்தத்தத்திற்காகக் காத்திருக்கிறார்கள். ஆண்டவர் புறஜாதிகளோடு ஈடுபடுவதை முடித்தபின்பு இஸ்ரவேல் ஜனங்களை ஒன்று சேர்க்கிறார் **(The promise of gathering of Israel after God finishes with the Church)**. அவர்களுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. அதுதான் எக்காளப் பண்டிகை. முதலாம் தேதி ஆசரியன் எக்காளத்தை ஊதும்போது அவர்கள் எல்லாரும் எருசலேமுக்கு வரவேண்டும். எதற்காக? <u>பாவநிவிர்த்தி பண்டிகைக்காக</u> **(Feast of Atonement)**.

அதைக்குறித்து லேவியராகமம் 16ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஒரு காளையை ஆரோன் தனக்காக பலி செலுத்துகிறான். பின்பு இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களைத் தெரிந்துகொண்டு சீட்டுப்போட்டு, ஒன்றைப் போக்காடாகவும் ஒன்றைப் பலியாடாகவும் கொடுத்து, ஜனங்களுக்காக அந்த வெள்ளாடு பலிசெலுத்தப்பட்டு கிருபாசனத்தில் அதின் இரத்தத்தை ஏழுதரம் தெளிக்கும்போது அந்த வருஷத்திலே சேர்ந்துபோன

அவர்களுடைய பாவம் நிவிர்த்திபண்ணப்படுகிறது. இப்படி வருஷத்தில் ஒரு முறை செய்யவேண்டும். அதுதான் பாவநிவிர்த்தி பண்டிகை.

ஆசாரியன் தனக்காக ஒரு காளையை பலிசெலுத்தி இரத்தத்தைக் கிருபாசனத்தில் ஏழுமுறை தெளிக்கும்போது முதலாவது அவன் பாவம் மன்னிக்கப்படுகிறது. பின்பு ஜனங்களுக்காக பலியாட்டின் இரத்தத்தைத் தெளிக்கும்போது அவர்களுடைய பாவமும் மன்னிக்கப்படுகிறது. அதன்பின்பு அதேபோல அடுத்த வருடம் செய்யவேண்டும். இந்த பாவநிவிர்த்தி பண்டிகை முக்கியமான நாள். அது ஏழாம் மாதம் 10ம் தேதி நடக்கிறது. 1ம் தேதி எக்காள சத்தம் தொனிக்கும்போது எல்லாரும் புறப்பட்டு அங்கு வந்துவிடுவார்கள். எதற்கென்றால், 10ம் தேதி பாவநிவிர்த்தி பண்டிகைக்காக. அப்பொழுது எல்லாருடைய பாவமும் மன்னிக்கப்படுகிறது. தேசத்தின் பாவம் மன்னிக்கப்படும்.

இன்றைக்கு உலகத்தின் பாவம், தமிழ் நாட்டின் பாவம் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. எல்லாருடைய பாவமும் தேவசமுகத்தை எட்டி, ஆண்டவர் நியாயந்தீர்க்கும் நேரம் வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய பாவம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டாயிற்று. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? அவர் அதை மறதிக்கடலில் போட்டுவிட்டார். நம்மை ஒருபோதும் பாவம் செய்யாதவர்களாக மாற்றுகிறார் **(We are justified)**. அல்லேலூயா.

மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டால்தான் **(Rapture)** இஸ்ரவேல் ஜனங்கள் பாவநிவிர்த்தி பண்டிகைக்குப் போகமுடியும் **(Bride will have to leave before Israel could have the Feast of Atonement)**. இப்போது எக்காளம் தொனிக்கிறது. ஏழு எக்காளங்கள் என்பது ஏழு செய்திகளாக இருக்கிறது **(7 Trumpets are 7 Messages)**. செய்தி நம்மை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தைக்கு **(Promised Word)** கொண்டுவருகிறது. அவர்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குக் **(Promised Land)** கொண்டுசெல்லுகிறது. நம்மை ஒரு ஆவிக்குரிய வார்த்தைக்குள் **(Spiritual Word)** கொண்டுவருகிறது. அல்லேலூயா. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? எத்தனைப் பேர் இந்த வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தையில் இருக்கிறோம்? நம்முடைய செய்தி வட்டாரங்களில் எப்போதும் “செய்தி, செய்தி” என்று கூறுகிறார்கள். அப்படி சொல்லுகிறதொன்றும் தவறில்லை. ஆனால் அவர்கள் வாயில் எப்போதும்

அப்படித்தான் வருகிறது. தீர்க்கதரிசி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தை **(Promised Word)** என்று சொல்லுகிறார். நாம் இந்தக் காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட அந்த வார்த்தையிலே வந்திருக்கிறோம். அதைத்தான் “செய்தி, செய்தி” என்கிறார்கள். அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறவர்கள் அப்படி கற்றுக்கொடுத்திருப்பதினால் அவர்கள் வாயில் அப்படி வருகிறது. அது பிரசங்கியார் செய்யும் தவறு **(pulpit mistake)**. அதுதான் **“அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக”** என்று யாக்கோபு 3:1ல் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏழு எக்காளங்கள் இன்றைக்கு தொனித்துக்கொண்டிருக்கிறது. நாம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தைக்கு வந்திருக்கிறோம் **(Bride is gathered under the Promised Word)**. அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குப் போயிருக்கிறார்கள் **(Israel is gathered in the Promised Land)**. நாம் எடுத்துக்கொள்ளப்பட்டால்தான் அவர்கள் பலியை அடையாளங் கண்டுகொள்வார்கள் **(recognize)**. அவர்கள் பாவநிவிர்த்திக்காக செய்யப்படும் பலியை அங்கீகரிப்பார்கள். இயேசு அவர்களுக்காக பலியானார். அவர்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். அதை அவர்கள் உணரவேண்டுமென்றால் நாம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

இப்போது அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்துவிட்டார்கள். அதைக் குறித்து உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். 1946ம் வருடம் மே மாதம் 7ம் தேதியிலே கர்த்தருடைய தூதனானவர் சகோ. பிரன்ஹாமைச் சந்தித்தார். அதே நாளில் இஸ்ரவேல் நாட்டிலே ஆறு முனைகளைக் கொண்ட நட்சத்திரமாகிய **(6 pointed star)** தாவீதின் கொடி பறந்தது. இஸ்ரவேல் நாடு உருவானது. மே மாதம் 11ம் தேதி 1948ம் வருடம் ஐக்கிய நாட்டு சபை **(United Nations)** இஸ்ரவேல் நாட்டை அங்கீகரித்தது.

பஸ்கா பண்டிகையிலிருந்து **(Feast of Passover)** கூடாரப்பண்டிகை **(Feast of Tabernacle)** வரைக்கும், அதாவது முதலாவது பண்டிகையிலிருந்து ஏழாவது பண்டிகை வரைக்கும் எதைக்குறிக்கிறதென்றால் சிலுவையில் இருந்து ஆயிரவருட ஆளுகைக்குப் போவதைக் குறிக்கிறது **(From Cross to Millennium)**. இயேசுகிறிஸ்து பஸ்கா பண்டிகையின்போது சிலுவையில் அறையப்பட்டார். கூடாரப்பண்டிகை ஆயிர வருட அரசாட்சியைக்

குறிக்கிறது. கிறஸ்துவின் மரணத்திலிருந்து கிறிஸ்துவின் ஆட்சி வரைக்கும் **(Christ's Death to Christ's Reign)**. நாம் ஆயிர வருட அரசாட்சியை எதிர்நோக்கியிருக்கிறோம். எத்தனைப் பேர் எதிர்நோக்கியிருக்கிறோம்? அதுதான் கூடாரப்பண்டிகை. விசுவாசித்தாலும் சிலர் விசுவாசியாவிட்டாலும் வேதத்தில் சொன்னது நிறைவேரப்போகிறது. என்னுடைய பலமான விசுவாசம் அதுதான். சிலர் விசுவாசியாமல் போனாலும் என்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? தேவன் ஒருவரே சத்தியபரர், எந்த மனுஷனும் பொய்யனாயிருக்கிறான்.

பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை, முதற்பலன்களின் பண்டிகை ஆகியவை எல்லாம் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் நடந்துவிட்டது. பெந்தெகொஸ்தே பண்டிகை வந்தது. அப்போது பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. இப்போது ஏழு சபைக்காலங்கள் வந்துவிட்டது. இப்போது எக்காளப் பண்டிகை என்ன செய்கிறது? அவர்கள் சொந்த தேசத்தில் போய் இருக்கிறார்கள். நமக்கு ஏழாம் தூதனுடைய செய்தி தேவரகசியத்தை வெளிப்படுத்துகிறது. அல்லேலூயா. நமக்கு ஒரு வாக்குத்தத்தம் **(Promise)** கொடுக்கப்பட்டது. அவர்களுக்கும் ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. “மறுபடியும் நான் உங்களைக் கூட்டிச்சேர்ப்பேன்” என்று சொன்னபடியே உலகத்தின் எண்பது நாடுகளில் சிதறிப்போன யூதர்கள் தங்களுடைய சொந்த நாட்டில் 1948ல் குடியேறிவிட்டார்கள். இன்றைக்கு எத்தனை வருடங்கள் ஆயிற்று? 68 வருடங்கள் ஆயிற்று. 68 வருடங்களாக அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 68 வருடங்களாக இந்த செய்தி **(Message)** இருக்கிறது. அல்லேலூயா. கர்த்தர் சகோ. பிரன்ஹாமைச் சந்திக்கும்போது மே மாதம் 7ம் தேதி. அன்றைக்குத்தான் இஸ்ரவேல் நாடு உருவாகியிருக்கிறது. அந்த நாளிலிருந்து செய்தியானது புறப்பட்டு ஒரு கூட்டமான மக்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தைக்கு **(Promised Word)** கொண்டுவந்திருக்கிறது. அல்லேலூயா. அவர்கள் பல நாடுகளில் **(nation)** சிதறப்பட்டிருந்தார்கள். நாம் பல ஸ்தாபனங்களில் **(denomination)** இருந்தோம். அதிலிருந்து இன்றைக்கு நாம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தையில் வந்திருக்கிறோம்.

முதல் மூன்று பண்டிகைகள் மனுஷகுமாரனுடைய ஊழியத்தைக் **(Son of Man Ministry)** குறிக்கிறது. கர்த்தர் மனுஷகுமாரனாக **(Son of Man)** வெளிப்பட்டார். அதன்பின்பு ஏழு சபைக்காலங்கள். நான்காவது பண்டிகையில் அவர் தேவனுடைய குமாரனாய் **(Son of God)** இருக்கிறார். அதன்பின்பு ஆயிர வருட அரசாட்சியிலே அவர் தாவீதின் குமாரனாய் **(Son of David)** இருக்கிறார். அல்லேலூயா. சொல்வதெல்லாமே நூறு சதவீதம் உண்மை. உங்களுக்கு விசுவாசிக்கத்தான் இருதயம் வேண்டும். மந்த இருதயமாக இருக்கக்கூடாது. மனுஷகுமாரன், தேவ குமாரன், தாவீதின் குமாரன். இதுதான் இயேசிகிறிஸ்துவின் இரகசியம். வெளிப்பாடு அதுதான். இயேசு மூன்று குமாரர்களில் இருப்பது **(Jesus in Three Sons)**. ஆனால் தேவனுடைய குமாரனுக்கும் தாவீதின் குமாரனுக்கும் மத்தியில் மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்படுகிறார் **(Son of Man is revealed again)**. மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்படுவார் என்று நமக்கு வாக்குத்தத்தம் இருக்கிறது. ஆமென். அப்போது உலகமானது சோதோமின் நிலைமையை அடைந்திருக்கும். இப்போது உலகம் சோதோமின் நிலைமையை அடைந்திருக்கிறது. இணைய தளங்கள் **(Internet)** மூலமாக உலகம் சோதோமாக மாறிவிட்டது. அவ்விதமான ஒரு நாளில் மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்பட்டிருக்கிறார்.

**லூக்கா 17: 30**

30. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.

அப்போது எப்படி இருக்கும்? உலகமானது நோவாவின் காலத்தைப்போல் விஞ்ஞானத்தில் பெருகி இருக்கும். சோதோமைப் போல் அசுத்தமான பாவங்கள் நிறைந்த காலம் இது. இந்த நேரத்தில்தான் மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்பட்டிருக்கிறார். தேவனுடைய குமாரனுக்கும் தாவீதின் குமாரனுக்கும் மத்தியில் மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்பட்டிருக்கிறார். அதுதான் ஏழாம் முத்திரை **(Seventh Seal)**. அதுதான் **வெளி 10: 1**.

1. பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது.

மனுஷகுமாரன் மறுபடியும் வெளிப்பட்டிருக்கிறார். அல்லேலூயா.

சிலுவையில் இருந்து ஆயிரவருட அரசாட்சி வரை இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாய் இருக்கிறது **(From the Cross to the Millennium it's the Revelation of Jesus Christ)**. எக்காளப் பண்டிகை வரும்போது இஸ்ரவேலர் ஒன்று கூடுகிறார்கள் **(Gathering of Israel)**. ஆயிரவருட அரசாட்சி வரும்வரை இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்துகொண்டே இருக்கிறார்கள். ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டே இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலும் சில பகுதிகளில் இருந்தார்கள். கேரளாவில் ஜெப ஆலயங்கள் **(Synagogues)** கட்டி அங்கே இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் ஜெப ஆலயங்களை விட்டு விட்டுப் போய்விட்டார்கள். அந்த ஜெப ஆலயம் அப்படியேதான் இருக்கிறது. அவ்விதமாக ஆங்கில பத்திரிக்கையில் **(The Hindu)** வாசித்தேன். வேதவாக்கியங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. ஆமென்.

வெளிப்படுத்தல் 2ம் அதிகாரத்தில் என்ன எழுதியிருக்கிறது? சபையானது ஆரம்பமாகிறது. எபேசு சபையில் தொடங்குகிறது. வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் ஆயிரவருட அரசாட்சி நடக்கிறது. சபையானது 2ம் அதிகாரத்திலிருந்து 19ம் அதிகாரம் வரைக்கும் மறுபடியும் வரவில்லை என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். 2ம் அதிகாரத்தில் எபேசு சபை ஆரம்பமாகி அந்த சபையானது மறுபடியும் எங்கே தோன்றுகிறது? வெளி 20: 6ல் தோன்றுகிறது. என்ன வாசிக்கிறோம்?

6. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

நாம் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராய் இருந்து ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வோம். அல்லேலூயா.

எக்காளப் பண்டிகைகும் பாவநிவிர்த்தி பண்டிகைக்கும் மத்தியில் எத்தனை நாட்கள் உள்ளது? முதலாம் தேதி எக்காளப் பண்டிகை. பத்தாம் தேதி பாவநிவிர்த்தி பண்டிகை. இடையில் ஒன்பது நாட்கள் **(9 days)** இருக்கிறது. அந்த ஒன்பது நாட்களில் என்ன நடந்ததென்று நமக்குத் தெரியுமா? தெரியாது. அதைக் குறித்து எதாவது எழுதியிருக்கிறதா? அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். வந்து 68 வருடங்கள் ஆகிவிட்டது. இந்தச் செய்தி வந்தும் 68 வருடங்கள் ஆகிவிட்டது. கர்த்தருடைய தூதனானவர் **(Angel of the Lord)** சகோ.

பிரன்ஹாமைச் சந்தித்ததிலிருந்து இன்றைக்கு 2016ல் 68 வருடங்கள் ஆகிறது. இதுதான் அந்த இடைவெளி நேரம். இந்த 68 வருடங்கள் தான் எக்காளப் பண்டிகைகும் பாவநிவிர்த்தி பண்டிகைக்கும் இடையில் உள்ள காலம்.

இந்த 68 வருடங்கள் லேவியராகமம் புத்தகத்தில் காண்பிக்கப்படவில்லை. அது எழுதப்படவில்லை. இந்த 68 வருடங்களாக நாம் என்ன செய்கிறோம்? கர்த்தருடைய தூதனானவர் சகோ. பிரன்ஹாமைச் சந்தித்தபோது செய்தி வெளிப்பட்டது. செய்தி இப்பொழுது ஒரு கூட்டமான மக்களைச் சேர்த்திருக்கிறது. நாம் இப்பொழுது என்ன நினைத்துக்கொண்டிருக்கிறோம்? கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கிறோம் **(We are looking for the Coming of the Lord)**. ஆமென். நம்முடைய சரீர மீட்புக்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம் **(We are waiting for our body change)**. ஆமென். நாம் முதலாம் உயிர்த்தெழுதல் நடப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம் **(We are looking for Resurrection)**. நாம் ஆட்டுக்குட்டியானவரின் கலியான விருந்துக்குப் போகக் காத்துக்கொண்டிருக்கிறோம் **(We are waiting for the Marriage Supper of the Lamb)**. இந்த 68 வருடங்களாக இப்படி நடந்துக்கொண்டிருக்கிறது. எத்தனைப் பேர் அப்படி இருக்கிறீர்கள்? புசிப்போம் குடிப்போம், உல்லாசமாக இருப்போம் என்றும், அதற்காகத்தான் உலகத்தில் பிறந்தோம் என்றும் உலகத்தின் மக்கள் நினைக்கிறார்கள். அழிவு சடுதியாய் அவர்களுக்கு வரும். நாம் அப்படியில்லை. நாம் ஆட்டுக்குட்டியானவரின் கலியான விருந்துக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். நாம் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கிறோம். அல்லேலூயா.

அங்கே ஒன்பது நாட்கள் இங்கே 68 வருடங்களாக நடந்துக்கொண்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்குப் பாவநிவிர்த்தி பண்டிகை வரவில்லை. பாவநிவிர்த்தி பண்டிகை வரும்போது இரண்டு சாட்சிகள் **(Two Witnesses)** அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைக் காண்பிப்பார்கள். இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பிக்கும்போது "ஐயோ அவரைச் சிலுவையில் அறைந்துவிட்டோமே! நம்முடைய மேசியாவை, நம்முடைய கர்த்தரை, நம்மை மீட்க வந்த இயேசுவை நாம் சிலுவையில் அறைந்துவிட்டோமே! நாம் இவ்வளவு நாட்களாய் குருடாயிருந்தோமே! மணவாட்டி மேலே போய்விட்டார்களே! நாம் இங்கே

இருக்கிறோமே!” என்று சொல்லி இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் **(144000)** யூதர்கள் புலம்புவார்கள். அந்தப் பலியை அங்கீகரிப்பார்கள். அதுதான் பாவநிவிர்த்தி **(Atonement)**. அவர்கள் இயேசுகிறிஸ்துவை நினைத்துப் புலம்புவார்கள். எப்படி புலம்புவார்கள்?

**சகரியா 12: 10**

10. நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

இரண்டு சாட்சிகளாகிய மோசேயும் எலியாவும் அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணும்போது அவர்களுடைய கோத்திரங்கள் மற்றும் எல்லாவற்றையும் வெளிப்படுத்திக் காண்பிக்கும்போது, நாம் பெற்ற இந்த சத்தியத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும்போது அவர்கள் புலம்புவார்கள். அது என்ன? அதுதான் பாவநிவிர்த்தி பண்டிகை. அது வந்துவிட்டதா? இன்னும் வரவில்லை. இந்த 68 வருடங்களாக இடைவெளி நேரத்தில் இருக்கிறோம்.

68 வருடங்களாக என்ன நடந்தது? முதலாம் உலக யுத்தமும் இரண்டாம் உலக யுத்தமும் **(I World War & II World War)** நடந்தது. 1914-1918 வரை முதலாம் உலக யுத்தமும், 1939-1945 வரை இரண்டாம் உலக யுத்தமும் நடந்தது. முதலாம் உலக யுத்தத்தில் இஸ்ரவேல் துருக்கியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்து படைத் தலைவர் ஆலன்பி **(General Allenby)** எருசலேமைக் கைப்பற்றப் போகும்போது அங்கே துருக்கியர்கள் இருந்தார்கள். எருசலேம் கர்த்தருடைய பட்டணம். அது பரிசுத்த நகரமானதால் **(Holy City)** அதின்மேல் குண்டு வீசக்கூடாது, துப்பாக்கிசூடு நடத்தக்கூடாது என்று ஆலன்பி நினைத்தார். எனவே என்ன செய்யலாமென்று இங்கிலாந்து அரசிடம் கேட்கும்போது, அவர்கள் “ஜெபம்பண்ணுங்கள்” என்று சொல்லிவிட்டார்கள். பின்பு துண்டு பிரசுரத்தில் “ஆலன்பி வருகிறார்” “ஆலன்பி வருகிறார்” என்று போடும்போது, அவர்கள் அல்லா **(Allah)** வருகிறார் என்று நினைத்து சரணடைந்தார்களாம். ஒரு குண்டு வீசாமல் துப்பாக்கிசூடு இல்லாமல் எருசலேமைக் கைப்பற்றினார்கள் **(They surrendered the city without one shot being fired)**. துருக்கியர்களாகிய

முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு அது இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் வரும்போது இஸ்ரவேல் நாடு உருவானது. அவர்களுக்குச் சட்டப்படி அது கொடுக்கப்பட்டது. 1967ம் வருடம் எருசலேம் இருக்கிற எல்லா இடத்தையும் தேவாலயத்தையும் அவர்கள் கைப்பற்றினார்கள். பதின்மூன்று அரபு நாடுகள் சுற்றி நின்று யுத்தத்திற்கு வந்தாலும் ஒரு சிறிய நாட்டை ஜெயிக்கமுடியவில்லை. இன்றைக்கும் அவர்களை ஜெயிக்கமுடியாது. ரஷ்யா கூட அவர்களிடம் தோல்வியடையும். அதுதான் கோகு மாகோகு யுத்தம் **(Battle of Gog and Magog)**. அவர்கள் தேவனுடைய ஜனங்கள். அல்லேலூயா. ஆண்டவர் அவர்கள்மேல் நினைவாயிருக்கிறார். அதற்காகத்தான் ஏழு பண்டிகைகள்.

இப்பொழுது அவர்கள் எக்காளப் பண்டிகையில் இருக்கிறார்கள். பாவநிவிர்த்தி பண்டிகை இன்னும் வரவில்லை. இன்னும் மேசியாவை அவர்கள் அறியவில்லை. மேசியாவைப் புறக்கணித்து இருக்கிறார்கள். இன்னும் அதை உணரவில்லை. இந்த இரண்டு யுத்தங்களும் என்ன செய்தது? அவர்களை இஸ்ரவேல் நாட்டில் கூட்டிச்சேர்த்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்திற்குப் போகவேண்டுமென்றுதான் கர்த்தர் அந்த இரண்டு உலக யுத்தத்தை அனுமதித்தார். துருக்கியர் வசமிருந்த அந்த நாடு கைப்பற்றப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது அவர்கள் சொந்த தேசத்தில் வந்திருக்கிறார்கள். 68 வருடங்கள் ஆகிவிட்டது.

இஸ்ரவேல் நமக்கு நாள்காட்டியாயிருக்கிறது. நேரம் என்ன என்று பார்க்கவேண்டுமென்றால் நாம் இஸ்ரவேலைப் பார்க்கவேண்டும். ஐயன்மீர் இதுவா சமயம்? 68 வருடங்கள் ஆகியிருக்கிறது. அத்திமரமானது துளிர்விடும்போது வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறியீர்களா? இந்த சந்ததி ஒழிந்துபோவதில்லை என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

**மத்தேயு 24: 34**

34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அங்கே ஒரு சந்ததி இருக்கிறது **(There is a generation)**. நாம் தான் அந்த கடைசி சந்ததி. இஸ்ரவேல் நாடு உருவானதை நாம் பார்க்கிறோம்.

இன்றைக்கு அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் இருக்கிறார்கள். அதைப் பார்க்கிற சந்ததி ஒழிந்துபோகாது. ஒழிந்துபோகாதென்றால் என்ன? எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** சென்றுவிடும். அல்லேலூயா. அது மரித்துப்போகாது. இஸ்ரவேல் நாட்டில் யூதர்கள் மறுபடியும் சேர்ந்திருக்கிறார்கள். அது நமக்கு ஒரு அடையாளம். அத்திமரம் **(இஸ்ரவேல்)** துளிர் விட்டிருக்கிறது. அது பூப்பூத்து காய்காய்த்து செழிப்பான தேசமாயிருக்கிறது. ஆறாவது வல்லரசாக அது இருக்கிறது. இப்போது நாம் அதைப் பார்க்கும்போது நாம் ஒழிந்துபோவதில்லை. கர்த்தர் எந்த நேரத்தில் வருவார் என்று நமக்குத் தெரியாது. அது நடுராத்திரியிலோ சேவல் கூவிடும் நேரத்திலோ எந்த நேரம் என்று நமக்குத் தெரியாது. அதனால் நாம் என்ன செய்யவேண்டும்? எண்ணெயைப் **(Oil of the Holy Ghost)** பெறவேண்டும்.

**மத்தேயு 25: 6**

6. நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

இதோ மணவாளன் வருகிறார், அவரைச் சந்திக்கப் புறப்படுங்கள் **(Behold the Bridegroom cometh, go ye out to meet Him)** என்ற சத்தம் கேட்டது. இதுதான் இந்த நேரத்திற்குரியச் செய்தி **(Message of the Hour)**. ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டிருக்கிறது. இப்போது மணவாட்டி மணவாளனைச் சந்திக்கப் போகவேண்டும். ஆமென். அந்த சத்தம் கேட்கும்போது புத்தியில்லாத கன்னிகைகள் **(Foolish Virgins)** என்ன செய்தார்கள்? அவர்கள் ஆயத்தமாகவில்லை **(They will be unprepared in that hour)**. பரிசுத்தஆவி பெறவில்லை. வார்த்தையில் வாஞ்சை இல்லை. வேதத்தை வாசிக்க மனதில்லை. ஜெபிக்க மனதில்லை. சிலருக்கு சபைக்கு வருகிறதற்குக்கூட மனதில்லை. இதுதான் புத்தியில்லாத கன்னிகை.

புத்தியுள்ள கன்னிகைகள் **(Wise Virgins)** "போதகர் அங்கே பிரசங்கம் பண்ணுவார், நாம் எண்ணெயைப் **(Holy Ghost)** பெறவேண்டும்" என்று வருவார்கள். அல்லேலூயா. அந்த வெளிப்பாடுதான் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைக் கொண்டுவருகிறது. அதைத் தவறவிடக்கூடாது. ஆமென். புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெயைப் பெறவேண்டிய நேரத்தில் தங்கள் விளக்குகளில் எண்ணெய் இல்லாமல் இருந்தார்கள். புத்தியுள்ள கன்னிகைகள் எண்ணெய் உடையவர்களாயிருந்தார்கள். இயேசுகிறிஸ்து

வரும்போது எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அல்லேலூயா. நம்முடைய விளக்கில் எண்ணெய் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இப்பொழுது எண்ணெய் கிடைக்கிறது. ஒரு காலத்தில் கிடைக்காது. லாஸ் ஏஞ்சலஸ் **(Los Angeles)** பட்டணம் தண்ணீருக்குள் போனபின்பு கிடைக்காது. அது எந்த நேரத்தில் போகும் என்று நமக்குத் தெரியாது. புத்தியுள்ள கன்னிகைகள் எடுத்துக்கொள்ளப்படுதலில் போகும்போது புத்தியில்லாத கன்னிகைகள் உபத்திரவகாலத்தில் போகவேண்டியதாகும் **(They are left back in the tribulation period)**. மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

அருமையானவர்களே, நாம் எந்த நேரத்தில் இருக்கிறோம்? இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பாவநிவிர்த்தி பண்டிகை இன்னும் வரவில்லை. எக்காளச் சத்தம் கேட்டு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு **(Promised Land)** வந்துவிட்டார்கள். நாம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தைக்குள் **(Promised Word)** வந்திருக்கிறோம். நாம் எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்நோக்கியிருக்கிறோம். அவர்கள் பாவநிவிர்த்தி பண்டிகையை எதிர்நோக்கியிருக்கிறார்கள். மேசியாவைப் புறக்கணித்தார்கள். மேசியா மறுபடியும் வெளிப்படவேண்டும். இரண்டு சாட்சிகள் வருவதற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். நாம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்காகக் காத்திருக்கிறோம். அதுதான் யூதர்களும் புறஜாதியும் **(Jews & Gentiles)**. ஜாதி இரண்டொழிய வேறில்லை. அந்த ஜாதி கிறிஸ்துவுக்குள் ஆனென்றும் இல்லை பென்னென்றும் இல்லை. கிறிஸ்துவுக்குள் எப்படி இருக்கிறது? யூதர்களும் புறஜாதியும் என்று இருக்கிறது. அல்லேலூயா. ஆண்டவர் யூதர்களுடன் எப்படி ஈடுபடுகிறார், புறஜாதிகளுடன் எப்படி ஈடுபடுகிறார் என்பதைத் தெரிந்துகொண்டால் நீங்கள் எந்த ஜாதி என்று தெரிந்துகொள்வீர்கள். நாம் மணவாட்டி **(We are the Bride)**. அல்லேலூயா. நாம் யூதர்கள் அல்ல.

இப்பொழுது எக்காளப் பண்டிகையை விளக்குவதற்கு ஒரு உதாரணத்தை நாம் பார்க்கலாம். யோசேப்பையும் அவன் சகோதரர்களையும் **(Joseph and his brethren)** குறித்து பார்க்கும்போது, தகப்பனார் அவனை மிகவும் நேசித்தார். அவனுக்குப் பலவருணமான அங்கியைக் கொடுத்தார். அவனுக்குத் தரிசனம் வந்தது. அவன் ஆவிக்குரியவனாய் இருந்தான். மற்ற சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள். அவனைப் பகைத்து கடைசியாக அவனை ஒரு குழியில் தூக்கிப்போட்டார்கள். அதன்பின்பு அவன் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். போத்திபார் வீட்டில் அடிமை வேலை

செய்துகொண்டிருக்கும்போது, போத்திபாரின் மனைவி அவன்மேல் அபாண்டமான பழியைச் சுமத்தினதால் அவன் சிறைச்சாலைக்குப் போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**ஆதியாகமம் 39: 20**

20. யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.

யோசேப்பு சிறைச்சாலையில் இருப்பது எதைக் குறிக்கிறது? இயேசிகிறிஸ்து சிலுவையில் தொங்கியதையும், பாதாளத்திற்கு இறங்கினதையும் குறிக்கிறது. யோசேப்பு இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு பரிபூரண அடையாளமாய் இருக்கிறான் **(Joseph was a perfect type of Jesus Christ)**. கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்பாடாய் இருக்கிறார் **(Christ is the mystery of God revealed)**. முழு மீட்பின் திட்டமும் கிறிஸ்துவுக்குள் இருந்தது **(The whole Plan of Redemption was laid in Christ)**. இயேசிகிறிஸ்து பரிபூரணமான வார்த்தையாய் **(Fullness of the Word)** இருக்கிறார். முழு வார்த்தையாய் **(Entire Word)** இருக்கிறார். அது வேதத்திற்குள் இருக்கிறது. ஒரு அடையாளமாக **(shadow & type)** யோசேப்பின் வாழ்க்கையில் நடந்தது **(Joseph in prison was a type of Christ on the Cross)**.

பஸ்கா பண்டிகையும் **(Feast of Passover)**, புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் **(Feast of Unleavened Bread)** சிலுவையைக் குறிக்கிறது. அது யோசேப்பின் வாழ்க்கையில் நிறைவேறுகிறது. சொப்பனத்திற்கு அர்த்தத்தைச் சொன்னபின்பு ராஜா அவனை எகிப்து தேசத்திற்கு அதிபதியாய் மாற்றுகிறான். பார்வோனின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டான் **(Exalted to the throne of Pharaoh)**.

**ஆதியாகமம் 41: 40, 41**

40. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில்மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.
41. பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி,

அது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் **(Resurrection)** குறிக்கிறது. சிறைச்சாலையில் இருந்து சிங்காசனத்திற்கு வருவது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. அதுதான் முதற்பலன்களின் பண்டிகை **(Feast of Firstfruits)**. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அல்லேலூயா. யோசேப்பைப் பற்றி ஐந்து செய்திகள் கொடுத்திருக்கிறேன். இணையதளத்தில் இருக்கிறது. அவன் உயர்த்தப்பட்டபின்பு பார்வோன் என்ன செய்கிறான்? அவனுக்கு விவாகம் செய்துவைத்தான்.

**ஆதியாகமம் 41: 45**

45. மேலும், பார்வோன் யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிட்டு; ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி புறப்பட்டான்.

அவனுக்கு சாப்நாத்பன்னேயா என்ற பெயரைவிட்டு, ஆஸ்நாத் கொடுக்கப்படுகிறாள். அவனுக்கு ஒரு மணவாட்டி கிடைக்கிறது. அதுதான் பெந்தெகொஸ்தே பண்டிகை **(Feast of Pentecost)**. பெந்தெகொஸ்தே பண்டிகையில் இருந்து எக்காளப் பண்டிகை வரைக்கும் ஏழு சபைக்காலங்களைக் குறிக்கிறது. ஏழு சபைக்காலங்களில் ஆண்டவர் தமக்கு ஒரு மணவாட்டியைத் தெரிந்துகொள்கிறார். அல்லேலூயா.

யோசேப்பு எகிப்து தேசம் முழுவதிற்கும் அதிகாரியாய் இருக்கிறான். அவனுக்கு விவாகம் நடக்கிறது. பின்பு குழந்தைகளும் பிறக்கிறார்கள். அதன்பின்பு என்ன வரவேண்டும்? எக்காளப் பண்டிகை வரவேண்டும். அது எதைக் குறிக்கிறது? இஸ்ரவேலர் ஒன்று கூடவேண்டும். இன்றைக்கு அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குப் போய் இருகிறார்கள். அது யோசேப்பு வாழ்க்கையில் எப்படி நடக்கிறது? அவனுடைய பதினோறு சகோதரர்களும் அவனிடம் வருகிறார்கள். பஞ்சம் அதிகமானபடியால் தானியம் வாங்குவதற்காக யாக்கோபு தன் குமாரர்களை எகிப்துக்கு அனுப்புகிறான். அவர்கள் கானான் தேசத்திலிருந்து எகிப்திற்கு வருகிறார்கள். எல்லா சகோதரர்களும் ஒன்று சேர்ந்து யோசப்பிடம் வருகிறார்கள்.

ஆனால் யோசேப்புதான் அங்கே அதிகாரியாக இருக்கிறான் என்று அவர்களுக்குத் தெரியாது. அவனுக்கு மனைவி பிள்ளைகள் இருக்கிறார்கள். எகிப்து முழுவதுக்கும் ராஜாவாய் இருக்கிறான். அவனுக்கு எபிரெய பாஷை

தெரியாததுபோல எகிப்திய பாஷைதான் பேசுகிறான். துபாசியைக் **(Translator)** கொண்டுதான் பேசுகிறான். இவன் எகிப்து பாஷையில் பேசும்போது அந்த துபாசி அவர்களுக்கு அதை எபிரெய பாஷையில் சொல்லுகிறான். இது எகிப்தியன், இவர் ஒரு பெரிய பதவியில் இருக்கிறார், இவர்தான் எல்லாவற்றிற்கும் அதிபதி என்று யோசேப்பின் காலில் போய் விழுந்தார்கள். அதுபோலவே இன்றைக்கு அவர்கள் மேசியாவை அறியாமலிருக்கிறார்கள். ஆனால் மேசியாவுக்கு மணவாட்டி கிடைத்திருக்கிறது. அல்லேலூயா. நாம் இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாய் இருக்கிறோம். அவருடைய பிள்ளைகளாய் நாம் இருக்கிறோம். நாம் அவரோடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆமென்.

யோசேப்பின் சகோதரர்கள் கூடிவந்தார்கள் **(Brothers gathered)**. சகோதரர்கள் என்றைக்குமே யூதர்களைத்தான் **(Jews)** குறிக்கும். நாம் மணவாட்டியாய் இருக்கிறோம். அவர்கள் சகோதரர்களாக இருக்கிறார்கள். எதற்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்? அழுது புலம்புவதற்காக **(To mourn and cry)**. அழுது புலம்பவேண்டுமென்றால் யோசேப்பு தன்னை வெளிப்படுத்த வேண்டும். அல்லேலூயா. யோசேப்பு தன்னை வெளிப்படுத்தாமல் அவர்கள் அவனை அடையாளம் கண்டுகொள்ளமுடியாது. யோசேப்பிற்குத் தெரியும் இப்பொழுது அவர்கள் தன்னிடம் வந்திருக்கிறார்கள் என்று. அதைப்போலவே யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று இயேசுகிறிஸ்துவுக்குத் தெரியும். ஆனால் ஆண்டவர் அவர்களுக்குத் தன்னை இன்னும் வெளிப்படுத்தவில்லை. பாவநிவிர்த்தி பண்டிகை **(Feast of Atonement)** இன்னும் வரவில்லை.

68 வருடங்களாக வந்துகொண்டிருக்கிறார்கள். 68 வருடங்களாக நாம் இங்கே இருக்கிறோம். ஆண்டவர் அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்த வேண்டுமென்றால் நாம் இங்கே இருக்கக்கூடாது. அதுதான் இடைவெளி நேரம். எக்காளப் பண்டிகைக்கும் பாவநிவிர்த்தி பண்டிகைக்கும் இடையில் 68 வருடங்களாக நாம் காத்திருக்கிறோம். எதற்காகக் காத்திருக்கிறோம்? எடுத்துக்கொள்ளப்படுவதற்காக **(Rapture)**. அல்லேலூயா. நாம் மேலே போனால்தான் அவர்களுக்கு வெளிப்படுத்த முடியும். வெளிப்படுத்தும்போது அவர்கள் அழுது புலம்புவார்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார்கள். அது இன்னும் நடக்கவில்லை. அதற்குபின்பு ஆயிரவருட ஆட்சி வரும். அவர்களுக்கு வெளிப்படுத்த

வேண்டுமென்றால் நம்மை மேலே அனுப்பவேண்டும் **(dismiss)**. யோசேப்பு அவனுடைய மனைவி பிள்ளைகளை அரண்மனைக்குள் அனுப்பிவிடுகிறான்.

**ஆதியாகமம் 45: 1**

1. அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல்: யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.

அதுவரைக்கும் அவனுடைய மனைவி பிள்ளைகள் எல்லாரும் அவன் பக்கத்தில்தான் இருந்தார்கள். ஆனால் தன்னை வெளிப்படுத்தும்போது எல்லாரையும் அவன் அரண்மனைக்குள் அனுப்பிவிட்டான். பின்பு தன் சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறான். என்ன செய்கிறான்? **(**ஆதி 45: 2**)**. அவன் சத்தமிட்டு அழுதான். பெரிய பதவியில் இருக்கிறான். எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாய் இருக்கிறான். பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கிறான். அவ்விதமான ஒரு சூழ்நிலையில் அவன் அழுகிறான். சத்தமிட்டு அழுகிறான். எல்லாருக்கும் அது கேட்கிறது. அதுமாத்திரமல்ல, "நான் யோசேப்பு" என்று சொன்னான்.

**ஆதியாகமம் 45: 3**

3. யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு; என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவனுக்கு முன்பாகக் கலக்கமுற்றிருந்ததினாலே, அவனுக்கு உத்தரம் சொல்லக்கூடாமல் இருந்தார்கள்.

இந்நாள் வரைக்கும் அவர்களுக்கு அது தெரியாது. இப்பொழுதுகூட 2000 வருடங்களாக அவர்களுக்குத் தெரியவில்லை. பெந்தெகொஸ்தே பண்டிகையில் இருந்து இன்றுவரைத் தெரியவில்லை. சொந்த தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். இயேசு தான் அந்த மேசியா என்று இன்னும் அவர்களுக்குத் தெரியவில்லை. இயேசுதான் யேகோவா தேவன் என்று தெரியவில்லை. அவர்களை மீட்க வந்த கர்த்தர் என்று உணரவில்லை. இத்தனை பண்டிகைகளை அவர்கள் நெடுநாட்களாய் ஆசரித்து வந்தார்கள். அதெல்லாம் இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மேசியாவை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர் வெளிப்படுத்தினாலொழிய அவர்களுக்குத் தெரியாது.

அவர் வெளிப்படுத்த வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? மணவாட்டியை மேலே அனுப்பவேண்டும். ஆஸ்நாத், எப்பிராயீம், மனாசே எல்லாரும் இருக்கிறார்கள். எல்லாரையும் அரண்மனைக்குள் அனுப்பினால்தான் இங்கே வெளிப்படுத்தமுடியும். ஆண்டவர் நம்மை அனுப்பிவிடுகிறார். எங்கே? கலியாண விருந்துக்கு **(Wedding Supper)**. அல்லேலூயா. "நான் என்னை என்னுடைய சகோதரர்களுக்கு வெளிப்படுத்தப்போகிறேன்". அதுதான் பாவநிவிர்த்தி பண்டிகை. அவரைச் சிலுவையில் அறைந்துபோட்டோமே என்று சொல்லி அழுவார்கள். யோசேப்பு அவர்களைக் கட்டிப்பிடித்து அழுகிறான். அவர்களும் அழுகிறார்கள்.

**ஆதியாகமம் 45: 15**

15. பின்பு தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்செய்து, அவர்களையும் கட்டிக்கொண்டு அழுதான்.

உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான் தான். நீங்கள் என்னை இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டீர்கள். இயேசுகிறிஸ்து என்ன சொல்லுவார்? "நீங்கள் என்னை முப்பது வெள்ளிக்காசுக்குக் காட்டிக் கொடுத்து சிலுவையில் அறைந்தீர்கள். அது நான் தான். நான் தான் உங்களுடைய மீட்பர். நான் தான் உங்கள் இரட்சகர். நான் தான் உங்கள் தேவன். எல்லா பண்டிகைகளும் என்னைத் தான் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள எல்லா அடையாளங்களும் என்னைத்தான் குறிக்கிறது. அது என்னைப்பற்றிதான் எழுதியிருக்கிறது. நீங்கள் அறியாமற்போனீர்கள்" என்று சொல்லுவார். அல்லேலூயா.

**ஆதியாகமம் 45: 5**

5. என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்.

என்னை விற்றுப்போட்டதற்காக நீங்கள் கவலைப்படவேண்டாம், சஞ்சலப்படவேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படி தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். வெகு ஜனங்களைக் காப்பாற்றுவதற்காக, இதோ மணவாட்டியை ஆண்டவர் கொண்டுவருவதற்காக அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். ஏழு

சபைக்காலங்களில் ஒரு கூட்டத்தை ஆண்டவர் ஆதாயம்பண்ணவேண்டும் என்பதற்காக அவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டது. அல்லேலூயா. நம்முடைய கண்களைத் திறப்பதற்காக ஆண்டவர் அவர்கள் கண்களைக் குருடாக்கினார். நாம் உள்ளே வரவேண்டும் என்பதற்காக அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்.

இப்பொழுது உலகத்தின் ஜனங்களும் ஸ்தாபனத்து மக்களும் புறக்கணிக்கும்போது ஆண்டவர் அவர்களிடம் போகிறார். அவர்கள் புறக்கணிக்கும்போது நம்மிடம் வந்தார். நாம் புறக்கணிக்கும்போது அவர்களிடம் போகிறார். அவர்களுக்கு மீட்பு வரவேண்டும். புறஜாதிகளுக்கு மீட்பு **(Redemption)** வந்தது. யூதர்களுக்கு மீட்பு வரவில்லை. மூன்றரை வருடங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1260 நாட்கள், 42 மாதங்கள், காலமும், காலங்களும், அரைக்காலமும் அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய நேரம் இருக்கிறது. அப்பொழுது ஆண்டவர் நம்மை மேலே அனுப்பியிருப்பார். அல்லேலூயா.

எக்காளப் பண்டிகை அவர்களைத் தங்கள் சொந்த தேசத்தில் ஒன்று சேர்த்திருக்கிறது. எக்காளச் சத்தம் நம்மை வார்த்தையில் ஒன்று சேர்த்திருக்கிறது. ஆனால் பாவநிவிர்த்தி பண்டிகை நமக்கு வரவில்லை. நாம் ஏற்கனவே பலியை அடையாளம் கண்டுகொண்டோம் **(We already recognized the Atonement)**. அல்லேலூயா. எத்தனைப்பேர் கண்டுகொண்டோம்? “இயேசு எனக்காக கல்வாரி சிலுவையில் மரித்தார். அவர் எனக்காக பலியானார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். அவர் உயிர்த்தெழுந்து என்னை மீட்டுக்கொண்டார்”. நாம் பலியை அறிந்துகொண்டோம். அவர்கள் இன்னும் அறியவில்லை. அவர்கள் அறியவேண்டிய ஒரு நேரம் வருகிறது. நாம் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அவர்கள் அறிந்துகொள்வார்கள். நாம் மேலே போவதற்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் மேலே போனால்தான் அவர்களுக்கு பாவநிவிர்த்தி பண்டிகை வரும். அப்பொழுது மேசியாவை அறிந்துகொள்வார்கள். இயேசுவை அறிந்துகொள்வார்கள். பாவநிவிர்த்தி பண்டிகையில் இருப்பார்கள்.

அவர்கள் எதற்காகத் தங்கள் நாட்டிற்கு வந்திருக்கிறார்கள்? மேசியாவை அறிந்துகொள்ளத்தான். அவர்கள் எழுபது வருஷ அடிமைத்தனத்திற்குப் பின்பு ஏன் இஸ்ரவேல் நாட்டிற்கு வந்தார்கள்? மேசியா அங்கே

வரவேண்டும். முதலாம் வருகை **(I Coming)** அங்கே வரவேண்டும். இப்பொழுது மறுபடியும் ஆண்டவர் அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஆகையால் மறுபடியும் அவர்கள் வந்திருக்கிறார்கள். எழுபது வருடங்களுக்குப் பின்பு திரும்பிவந்தார்கள். அதன்பின்பு இயேசுவை மறுதலித்ததால் சிதறடிக்கப்பட்டுப் போனார்கள். 1900 வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் வந்திருக்கிறார்கள். எதற்காக? பாவநிவிர்த்தி பண்டிகைக்காகக் காத்திருக்கிறார்கள். இரண்டு உலக யுத்தங்கள் **(Two World Wars)** அவர்களை அங்கே கொண்டுவந்திருக்கிறது. ஆண்டவர் இரண்டு உலக யுத்தங்களை ஏன் கொண்டுவந்தார்? உலகத்து மக்களுக்குத் தெரியாது. சரித்திரக்காரர்களுக்குத் தெரியாது. ஆனால் கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வரவேண்டும். எதற்காக? பாவநிவிர்த்தி பண்டிகைக்காக. அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் **(144000)** அவரை அறிந்துகொள்வார்கள்.

சகோதரர்கள் தன்னை அறிந்துகொண்டபின்பு யோசேப்பு என்ன செய்தான்? “நீங்கள் எல்லாரும் இங்கே வந்துவிடுங்கள். உங்கள் மனைவி பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வாருங்கள். என்னுடைய மனைவி பிள்ளைகள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். நம் தகப்பனாரும் எல்லோரும் சேர்ந்து இங்கே இருக்கலாம். என் பக்கத்திலேயே கோசேனிலே நீங்கள் இருந்து, இந்த எகிப்து தேசத்தை நாம் சுதந்தரித்து செழிப்பாய் இருப்போம். முதல்தரமான ஆகாரத்தை நான் உங்களுக்குத் தருகிறேன். எல்லாவற்றையும் இலவசமாக நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். எல்லாரும் இங்கே வந்துவிடுங்கள்” என்று சொன்னான். அதுதான் ஆயிரவருட அரசாட்சி **(Millennium)**. அல்லேலூயா. அதுதான் <u>கூடாரப்பண்டிகை</u> **(Feast of Tabernacle)**. கூடாரப்பண்டிகையில் கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் எல்லாரும் ஒன்றாக இருப்போம். இயேசுவோடுகூட நாம் இருப்போம். அப்பொழுது உலகம் செழிப்பாக இருக்கும். நம்முடைய யோசேப்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அல்லேலூயா. நாம் அவருடைய மணவாட்டியாய் **(Bride)** இருக்கிறோம். அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாய் **(Sons & Daughters)** இருக்கிறோம். இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் அவருடைய சகோதரர்களாக இருக்கிறார்கள். சகோதரர் குடும்பம் **(Brothers Family)**,

மணவாட்டி குடும்பம் **(Bride Family)** எல்லாருமே நாம் இந்த உலகத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுப்போகிறோம். அல்லேலூயா. இதுதான் கூடாரப்பண்டிகை. லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் இருக்கிறது. இன்றைக்கு சரித்திரம் அதற்கு சாட்சியாய் இருக்கிறது.

நாம் எங்கே இருக்கிறோம்? 68 வருடங்களாக நாம் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கிறோம். நாம் எடுத்துக்கொள்ளப்படாமல் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேருக்கு பாவநிவிர்த்தி பண்டிகை வராது. ஆறாவது பண்டிகை வராது. அது வரவேண்டுமானால் நாம் மேலே போகவேண்டும். நாம் மேலே போனபின்பு, அவர்கள் பலியை அறிந்துகொண்ட பின்பு, ஆயிரவருட ஆளுகை வரும்போது எல்லாரும் சேர்ந்து இங்கே வருவோம். அல்லேலூயா.

இவ்வளவு ஆசீர்வாதத்தை கர்த்தர் நமக்கு வைத்திருக்கிறார். விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும், அல்லது நீங்கள் இதை கவலையீனமாக எடுத்துக்கொண்டாலும் இது நிறைவேறப்போகிறது. ஒரு வேளை ஒரு சிலருக்கு இதில் நாட்டம் **(interest)** இல்லாமல் இருக்கலாம். நாட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இது நிறைவேறப்போகிறது. நான் அதில் நாட்டம் உள்ளவனாக இருக்கிறேன். எத்தனைப்பேர் நாட்டம் உள்ளவர்களாக இருக்கிறோம்? ஒரு நாள் ஆயிரவருட அரசாட்சி நடக்கும். ஏழாவது பண்டிகை நிறைவேறும். அல்லேலூயா. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? இதுவரைக்கும் துல்லியமாக நிறைவேறிக்கொண்டு வருகிறது. இனிமேலும் நடக்கப்போகிறது. தேவனுடைய வார்த்தை உண்மை **(God’s Word is True)**. நாம் ஜெபம் செய்வோம்.

வேதாகமம் துல்லியமாயிருக்கிறது. சரித்திரம் அதை நிரூபித்துக் காண்பிக்கிறது. தேவன் கிரியைச் செய்துகொண்டிருக்கிறார். அவர் மவுனமாயிருக்கவில்லை. அவர் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. நம்முடைய இருதயத்தில் எண்ணங்கள் தோன்றுவதற்கு முன்னே அதை எல்லாவற்றையும் அவர் அறிந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். வேத புஸ்தகமானது இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாய் இருக்கிறது. அந்த வெளிப்பாடு நமக்கு வந்திருக்கிறது. நம்முடைய ஸ்தானம் என்ன, நம்முடைய நேரம் என்ன என்பதை ஆண்டவர் நமக்குக் காண்பித்துக்கொண்டே இருக்கிறார்.

இப்பொழுது ஆயத்தமாக வேண்டிய நேரம். உலகம் இன்றைக்கு பாவத்தில் இருக்கிறது, குடிபோதையில் இருக்கிறது. ஜனங்கள் இச்சையில் இருக்கிறார்கள். உலகம் சீர்கெட்ட நிலையில் சோதோமாக இருக்கும்போது மனுஷகுமாரனுடைய ஊழியம் நமக்கு வந்திருக்கிறது. நாம் எல்லாவற்றையும் வேதத்தில் பார்க்கவேண்டும். தீர்க்கதரிசி செய்தியைப் படித்து அதை வேதத்தில் பார்க்கவேண்டும். வேதத்தில் உங்களைக் காணமுடியவில்லை என்றால் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் உங்கள் பெயரில்லை. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் உங்கள் பெயர் இருந்தால் அது ஒருக்காலும் கிறுக்கப்படுவதில்லை. உங்களுக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் நிச்சயம். உங்கள் பெயரைப் பார்ப்பதற்காகத்தான் இந்த செய்தி கொடுக்கப்படுகிறது. உங்கள் பெயரைப் பார்க்கிறீர்களா? உங்கள் காலத்தைப் பார்க்கிறீர்களா? நாம் காலத்தையும் அதின் செய்தியையும் அறிந்திருக்கிறோம். நாம் அவருடைய மணவாட்டியாய் இருக்கிறோம். யோசேப்பின் மனைவி ஆஸ்நாத்தாய் இருக்கிறோம். நாம் அரண்மனைக்குப் போனால்தான் அவர் சகோதரர்களுக்கு வெளிப்படுத்த முடியும்.

நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் **(Second Coming of Christ)**, முதலாம் உயிர்த்தெழுதலையும் **(First Resurrection)**, சரீர மறுரூபமாக்கப்படுலையும் **(Body Change)**, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தையும் **(Marriage Supper of the Lamb)** எதிர்நோக்கியிருக்கிறோம். பாவநிவிர்த்தி பண்டிகை நமக்கு இல்லை. நாம் ஏற்கனவே பலியை அடையாளம் கண்டுகொண்டோம். அவர்கள் இன்னும் அறியவில்லை. அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கிறார். அதற்காகத்தான் அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். பாவநிவிர்த்தி பண்டிகைக்கு வந்திருக்கிறார்கள்.

நாம் ஆயிரவருட அரசாட்சியை எதிர்நோக்கியிருக்கிறோம். அவர்களோடு சேர்ந்து நாமும் ஆயிரம் வருடம் ஆளுகை செய்வோம். தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராய் இருந்து ஆயிரம் வருடம் ஆளுகை செய்வோம். நாம் பாக்கியவானும் பரிசுத்தவானுமாய் இருக்கிறோம். எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம் நமக்குக் கொடுத்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தத்திற்காகக் நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கலாம். கர்த்தரை நோக்கி ஜெபிப்போம். அவருடைய வார்த்தை நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். இந்நேரமட்டும் உம்முடைய வார்த்தையை தியானித்தோம். ஏழு சபைக்காலங்கள் கடந்து இப்பொழுது எக்காள சத்தம் எங்களை வார்த்தையில் கொண்டுவந்திருக்கிறது. அவர்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் கொண்டுவந்திருக்கிறது. நாங்கள் நீதிமானாக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் பரிசுத்தஆவியினால் முத்தரிக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் உம்முடைய வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய சரீரம் மறுரூபமாக்கப்பட வேண்டும். இந்த உலகத்தைவிட்டு எங்களை எப்பொழுது எடுத்துக்கொள்ளுவீர் என்று காத்துக்கொண்டிருக்கிறோம். சரீர மீட்புக்காக நாங்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும் என்று அழைக்கிறோம்.

உம்முடைய சகோதரர்களுக்கு உம்மை வெளிப்படுத்தும். பாவநிவிர்த்தி பண்டிகை வரட்டும். அவர்கள் பலியைக் கண்டுகொள்ளட்டும். அந்த வேளையை அவர்களுக்கு வைத்திருக்கிறீர். அவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறீர். ஏற்கனவே அந்த ஏழு பண்டிகைகளிலும், யோசேப்பு வாழ்க்கையிலும் அதை அடையாளமாகக் காண்பித்திருக்கிறீர். சகோதரர்கள் இன்றைக்குத்தான் தங்கள் சொந்த தேசத்திற்குக் கூட்டிசேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குப் பாவநிவிர்த்தி பண்டிகை இன்னும் வரவில்லை. அத்றகுமுன் எங்களை எடுத்துக்கொள்ளப்போவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும். இங்கே இருக்கிற எல்லோரையும் ஆயத்தப்படுத்தும்.

நாங்கள் புத்தியில்லாத கன்னிகைகள் போல ஆயத்தமில்லாதவர்களாக இருக்கக்கூடாது. பரிசுத்தஆவியாகிய எண்ணெயைப் பெறவேண்டும். புத்தியுள்ள கன்னிகைகளாக மாறவேண்டும். நாங்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எங்கள் பெயரைப் பார்க்கவேண்டும். நாங்கள் மணவாட்டி என்று உறுதியாகவேண்டும். கர்த்தாவே நாங்கள் பரிசுத்தமாக்கப்படவேண்டும். நாங்கள் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் **(Baptism of the Holy Ghost)** பெறவேண்டும்.

இது புளிப்புள்ள அப்பம்தான், ஆனால் அக்கினி வந்து அதை அங்கீகரிக்கட்டும். நாங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறோம். கர்த்தாவே உம்முடைய குமாரரும் குமாரத்தியாகவும் இருக்கிறோம். உம்முடைய

மணவாட்டியாய் இருக்கிறோம். எங்களுடைய ஸ்தானத்தை வேதத்தில் பார்க்கிறோம். நாங்கள் கண்டுகொள்ள உதவி செய்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் புத்திரசுவிகார காலத்தில் **(Adoption Age)** வந்திருக்கிறோம். புத்திரசுவிகாரத்தின் ஆவியைத் தந்திருக்கிறீர். எங்களுடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரத்துக்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். 68 வருடங்களாக காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் 68 வருடங்களாக காத்துக்கொண்டிருக்கிறோம். ஆயிர வருட ஆளுகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்.

இந்த உலகம் பிரசவவேதனைப்படுகிறது. அது அர்மகெதோன் **(Armageddon)** யுத்தத்தை எதிர்நோக்கியிருக்கிறது. பூமியதிர்ச்சிகள் ஏற்படுகிறது. எரிமலைகள் வெடிக்கிறது. சுனாமி வருகிறது. வெள்ளங்கள் வருகிறது. அழிவு சடுதியாய் வந்துகொண்டிருக்கிறது. பூமியானது புதிய உலகத்தைப் பிறப்பிப்பதற்காக வேதனைப்படுகிறது. அது எங்களுக்காகப் புதிதாக மாற்றப்படப்போகிறது. யோசேப்பும் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் சகோதரர்களும் சேர்ந்து குடியிருக்கவேண்டும். இந்த உலகத்திற்கு நாங்கள் மறுபடியும் வரவேண்டும். உம்மோடு ஆளுகை செய்யவேண்டும். உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் இந்த பூமியிலே செய்யப்படுவதாக. கர்த்தாவே எங்களை அதற்கென்று ஆயத்தப்படுத்தும்.

சபையானது மறுபடியும் இந்த உலகத்திற்கு வரும். ஆண்டவரே மறுபடியும் எங்களை வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்துக்குக் கொண்டுவருவீர். உம்முடைய வேதவாக்கியங்கள் உண்மையாயிருக்கிறது. அது எங்களுடைய ஜீவியத்தில் நிறைவேறட்டும். நாங்கள் பாக்கியவான்களாகவும் பரிசுத்தவான்களுமாக இருக்கக் கிருபை தருவீராக. முழங்கால்படியிட்டிருக்கிற பெரியோர் சிறியோர் எல்லோரையும் ஆசீர்வதியும், ஆயத்தப்படுத்தும், கிருபையாயிரும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.